Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 16, 2021

வியாழக்கிழமை டிசெம்பர் 16, 2021 | ஒளி: 07 கதிர்: 180 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## சிங்கள ஆணையை ஏற்க மறுத்தார் மனோ



கடந்த ஆட்சியில் அமைக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு குழு மற்றும் செயலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரிப்பதற்காக தற்போதைய ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, விசாரணைக்கு சமூகமளிக்குமாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கு, அழைப்பாணை அனுப்பியுள்ளது.

தொடர்ச்சி P2

## செட்டியார் தெருவில் வாள்வெட்டு; ஒருவர் காயம்

கொழும்பு, செட்டியார் தெருவிலுள்ள தங்க ஆபரண கடையொன்றில் நேற்று (15) காலை வாள்வெட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. பையொன்றில் மறைத்து எடுத்து வந்த வாளை எடுத்தவர், கடையொன்றுக்கு வெளியில் நின்றும், அக்கடைக்குள் உள்ளே சென்றும் சரமாரியாக வெட்டியுள்ளார். இதில், ஒருவர் பலத்த காயமடைந்தார். அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்ட நபர், சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# பதிலளிக்க பயந்தே மூடினர்

### கிரியெல்ல குற்றச்சாட்டு: அட்டைகளின் தளம் ஒன்றுதான் என்கிறார்



அரசியலமைப்பின் பிரகாரம், பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, நெருக்கடியான காலக்கட்டங்களில் கூட்டத்தொடரை ஒத்திவைக்கக் கூடாது; அமர்வு நாள்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவே வேண்டும் எனக் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இரண்டாம் உலகக் போரின்போது, பிரித்தானிய பாராளுமன்றத்தின் மீது, மூன்று தடவைகள் குண்டுகள் வீசப்பட்ட போதிலும், பாராளுமன்றம் மூடப்படவில்லை. எனினும், அருகிலிருந்த தேவாலயங்களில் செங்கோலுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டன என்றார்.

நாட்டில் நெருக்கடியான நிலைமையொன்று ஏற்பட்டிருக்கும் நிலையில், இதைச் செய்வது பொருத்தமல்ல. சுதந்திரத்திற்குப் பிறகு நமது நாடு மிகவும் ஆபத்தான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை சந்தித்துள்ளது. வரலாற்றில் பல்வேறு கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்தாலும் இத்தகைய ஓர் நிலையை எதிர்நோக்கவில்லை என்றார்.

தொடர்ச்சி P2

## காதலிக்க மறுத்த யுவதியை சுட்டுத் தள்ளிய இளைஞன்

### யுவதி பலி; இளைஞனுக்கு வலை

தன்னைக் காதலிக்க மறுத்த யுவதியை, இளைஞன் ஒருவர் சுட்டுத்தள்ளிய சம்பவமொன்று, வவுனியா வடக்கு, சேனைப்பிலவு எல்லைக் கிராமத்தில், நேற்று (15) இடம்பெற்றுள்ளது. குறித்த இளைஞன், சேனைப்பிலவில் வசிக்கும் 34 வயதுடைய பெண்ணொருவரை, தன்னை காதலிக்குமாறு வற்புறுத்தி வந்துள்ளார். அத்துடன் துன்புறுத்தல்களிலும் ஈடுபட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## சஹ்ரானுக்கு பணம் கொடுக்கவில்லை

### பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதைப் போல் தேசிய பாதுகாப்பை கட்டியெழுப்புவதற்கு இலங்கை இராணுவமானது கடந்த இரண்டு வருடங்களுக்குள் பாரிய விடயங்களை முன்னெடுத்துள்ளதென தெரிவித்த பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, இராணுவ அல்லது உளவுத்துறை சேவைகள் தொலைபேசி ஒட்டுக்கேட்பதில் ஈடுபடுவதில்லை என்றும் தெரிவித்தார்.



ஜனாதிபதி ஊடகப் பிரிவில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

#### ஒத்திவைப்பு வருடாந்தம் நடக்கும்

## எதிர்க்கட்சியின் கருத்துகள் நகைப்புக்குரியன



பாராளுமன்ற அமர்வுகள் அடுத்த வருடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையானது ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் நிகழ்வு எனத் தெரிவித்துள்ள போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும் கருத்துகள் நகைப்புக்குரியன எ

தொடர்ச்சி P2

## நீதிமன்றத்தின் கோரிக்கைக்கு லிட்ரோ நிறுவனம் இணக்கம்

### உள்ளீடு தொடர்பான ஸ்டிக்கரும் ஒட்டப்படும்



இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவகத்தின் தரநிலைகளுக்கு இணங்க திரவமாக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு லிட்ரோ எரிவாயு நிறுவனம், நேற்று (15) அறிவித்தது.

தொடர்ச்சி P2

## யாழ். மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

■ எம். றொசாந்த், எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், மூன்று மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான பட்ஜெட், மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணனால் நேற்றைய தினம் (15), சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நடைபெற்ற விவாதங்களை அடுத்து நடைபெற்ற வாக்கெடுப்பில்,

தொடர்ச்சி P2



## விஜயவீரவுக்கு நடந்தது என்ன?

### விரைவில் அம்பலம் என்கிறார் எம்.பி

■ பா.நிரோஸ்



மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் ரோஹண விஜயவீர இயற்கையாக மரணமடைந்தாரா? அல்லது பொலிஸாரால் படுகொலை செய்யப்பட்டாரா என்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பாராளுமன்றத்தில் பதிலளிப்பார் என ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்தார். ரோஹண விஜயவீர தொடர்பில் இம்மாதம் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாவொன்றை லலில் எல்லாவல எம்.பி,

தொடர்ச்சி P2

#### அரச ஊழியர்களின்

## ஓய்வூதிய வயதெல்லை குறைப்பு

### பழைய வர்த்தமானி அறிவித்தலும் இரத்து

நிதியமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன், அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயது திருத்தப்பட்டு 57 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது என்று, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல,

தொடர்ச்சி P2

#### பால்மா தட்டுப்பாடு தலைவிரித்தாடும் நேரத்தில்

## மண்ணுக்குள் பால் வார்ப்பு

### 125,000 பால் பக்கெட்டுகள் புதைப்பு

திகனை மில்கோ பால்மா உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 180 மில்லிலீற்றர் கொள்ளளவைக் கொண்ட 125,000 திரவப்பால் பக்கெட்டுகள், குழி தோண்டிப் புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், விசாரணைகளை முன்னெடுக்குமாறு விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

#### உண்மையான தொழிலாளர் தலைவர்கள்

## குறுகிய அரசியல் நலன்களுக்காக போராடவில்லை

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



உண்மையான தொழிலாளர் தலைவர்கள் போராடுவது குறுகிய அரசியல் நலன்களுக்காக அல்ல என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற அரச அதிகாரிகளை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், உண்மையான தொழிலாளர் தலைவர்கள் போராடுவது குறுகிய அரசியல் நலன்களுக்காக அல்ல. வேலையிழந்து சிறை சென்றாலும் எத்தனை இன்னல்கள் வந்தாலும் சகித்துக் கொண்டு போராடுகிறார்கள். இன்று இங்குள்ள தொழிலாளர் தலைவர்கள் உழைக்கும் மக்களுக்கு தங்களால் இயன்றவரை நேர்மையாக சேவையாற்றியிருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இவர்களில் பெரும்பாலானோர், தங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியை தங்கள் தொழில்முறை சக ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே செலவிட்டுள்ளனர் என்றார்.

தொடர்ச்சி P2

## "கண்டால் வரச் சொல்லுங்க"



பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கினை பகிரங்க விவாதத்துக்கு வருமாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் பாராளுமன்றத்தில் வைத்து பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ள நிலையில், நஸீர் அஹமட்டினை கண்டால் கூட்டி வாருங்கள், விவாதத்துக்கு அழைத்து வாருங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தன்னை விவாதத்துக்கு வருமாறு அவர் சவால் விடுத்திருந்தார். உண்மையிலேயே அது தொடர்பாக பல்வேறு ஊடகங்கள் அதனை முன்னின்று நடத்த அனுமதி கோரியிருந்தனர்.

தொடர்ச்சி P2

## உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாது

### ஆளுங்கட்சி திட்டவட்டம்



எக்காரணங்களுக்காகவும் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படாதென ஆளும் கட்சியின் உறுப்பினர், ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், கொரோனா வைரஸால் உலகம் முழுவதிலும் உற்பத்திப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் என்கிற வகையில் நாம் இதனை சவாலாக எடுத்து உற்பத்திப் பொருளாதார செயற்பாடுகளை ஆரம்பித்தோம் என்றார்.

தொடர்ச்சி P2

#### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## சிசிர அழைக்கப்படார்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சியாளராக தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மென்டிஸ் அழைக்கப்படமாட்டார் என்று சட்டமா அதிபர், கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு நேற்று (15) அறிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னரே புலனாய்வுத் தகவல் கிடைத்த போதும் தடுக்கத் தவறியதன் மூலம் குற்றப் புறக்கணிப்பு குற்றச்சாட்டின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற விசேட தீர்ப்பாயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## செட்டியார் தெருவில் வாள்வெட்டு: ஒருவர் காயம்

வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியவர், வாளை எடுத்துக்கொண்டு நடுவீதியில் நின்றவாறும் கூச்சலிட்டமையை அவதானிக்க முடிந்தது. இதனால், அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் நாலாபுறங்களும் பதறியடித்து சிதறியோடினர்.

கொடுக்கல், வாங்கல் பிரச்சினையே இந்த வாள்வெட்டுக்கு காரணமென ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார், மேற்கொண்டு வருகின்றனர்.

## காதலிக்க மறுத்த யுவதியை சுட்டுத் தள்ளிய இளைஞன்

இச்சம்பவம் குறித்து, அந்த யுவதியின் தாயார் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் மூன்று தடவைகள் முறைப்பாடு செய்துள்ளார். எனினும், எந்த நடவடிக்கையும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில், பாலசுந்தரம் சத்தியகலா 34 வயதுடைய பெண்ணே பலியாகியுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன், நெடுங்கேணி பொலிஸாரால் ஏற்கெனவே தண்டனைக்கு உட்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் தண்டனை பெற்றவர்.

தண்டனை காலம் நிறைவடைந்ததன் பின்னர், கிராமத்துக்கு திரும்பிய அவ்விளைஞன், சமூகத்தினருடன் ஒத்திசைவான செயற்பாடுகளுக்கு குந்தகம் புரிந்துவந்துள்ளார். இதுதொடர்பில், கிராம மக்களும் முறையிட்டுள்ளனர் எனினும், பொலிஸார் அதிரடியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சஹ்ரானுக்கு பணம் கொடுக்கவில்லை

அங்கு கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், "பயங்கரவாதியான சஹ்ரான் ஹாஷிமுக்கு அரசாங்கத்தால் பணம் கொடுக்கப்பட்டதான குற்றச்சாட்டுகளை முழுமையாக நிராகரித்தார். அந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானவை மற்றும் ஆதாரமற்றவை என்றார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

இன்று நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதுடன் பிரிவினைவாதம் தலைதூக்குவது துளியளவேனும் இடமில்லை எனத் தெரிவித்த அவர், எனவே இலங்கையர் எவரும் தேவையற்ற பயங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். அரச புலனாய்வு பிரிவு மற்றும் ஏனைய புலனாய்வுப் பிரிவினர் ஒன்றிணைந்து பலமான வலையமைப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

ஓய்வுப் பெற்ற இராணுவ அதிகாரிகள் பலர் அரச பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளமை எவ்விதத்திலும் இராணுவமயமாக்கல் இல்லை. ஓய்வுப்பெற்ற இராணுவ அதிகாரிகள் பல வருடங்கள் அனுபவம், தெளிவு என்பவற்றைப் பயன்படுத்தி நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வதில் எவ்வித தவறும் இல்லை என்றார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் நாட்டை கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பது இராணுவத்தின் கடமை என தெரிவித்துள்ள அவர், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை என்பன இதற்காக பாரிய பங்காற்றி வருகின்றன என்றார்.

## ஓய்வூதிய வயதெல்லை குறைப்பு

நேற்று (15) அறிவித்தார். இதுதொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது; முன்னர் 60 ஆக இருந்த ஓய்வூதிய வயது தற்போது 57 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதுடன், அரச துறையில் தங்களது சேவையைத் தொடர விரும்பும் ஊழியர்கள் 5 ஆண்டுகள் நீட்டிக்க மேன்முறையீடு செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் ஓய்வூதிய வயதெல்லை 62 வயதாக இருக்கும்.

அதுமட்டுமின்றி, 5 வருடங்களுக்கு ஓய்வூதிய வயதெல்லையை நீட்டிக்கக் கோரியவர்கள், இடையே ஓய்வு பெற விரும்பினால் 3 மாத அறிவிப்பு காலத்துடன் தங்கள் இராஜினாமா கடிதங்கள் மூலம் அறிவித்து ஓய்வு பெறலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, 57 வயதுக்குள் உடல் ரீதியாக கடமைகளைச் செய்ய இயலாமல், சேவை நீட்டிப்புக்கு விண்ணப்பித்தால் துறைசார்ந்த தலைவர் அது தொடர்பில் ஆய்வு செய்து, ஊழியரால் பணியைத் தொடர முடியுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வேளை, பணியாளரால் வேலை செய்ய முடியாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர் பணியாளருக்கு அதுதொடர்பில் தெரிவிக்க வேண்டும் என்பதுடன், அதிகபட்சமாக 6 மாதங்கள் பணி நீட்டிப்பை வழங்கமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயல்பாட்டுக் கையேட்டின் விதிகளுக்கு அமைய அனைத்து அரச ஊழியர்களுக்கும் பொருந்தும் என்றும் 2013 ஜனவரி 15 ஆம் திகதி அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி இரத்து செய்யப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிசிர அழைக்கப்படார்

இந்த வழக்கு விசாரணைக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளான நாமல் பாலெல்ல, ஆதித்ய படபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஷாதீன் ஆகியோரடங்கிய அமர்வு முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, மூன்றாவது சாட்சியாக பெயரிடப்பட்ட மெண்டிஸ் சாட்சியாளராக அழைக்கப்படமாட்டார் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன், வழக்கின் அடுத்த விசாரணை ஜனவரி 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## பதிலளிக்க பயந்தே மூடினர்

இவ்வாறான நெருக்கடி மிக்க சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தை மூடுவது அவசியமில்லை. மாறாக பாராளுமன்றத்தின் சபை அமர்வுகளின் எண்ணிக்கைகளைத் தான் அதிகரிக்க வேண்டும் என்றார்.

நெருக்கடியான காலங்களில் பாராளுமன்றம் இன்றியமையாதது. அரசாங்கத்தால் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது என்பது பாராளுமன்றத்தை மூடியதன் மூலம் மிகத் தெளிவாகத் தெரிகிறது என்றார்.

"ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. பாராளுமன்றம் கூட்டப்பட்டு, ஒரு வருடத்துக்கு மேல் ஆகிறது. துறைசார் மேற்பார்வை குழு இன்னும் நியமிக்கப்படவில்லை. தினமும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபாநாயகரிடம் கேட்கிறேன். சபாநாயகர் இதற்கு பதில் அளிப்பதில்லை" என்றார்.

இந்தப் பாராளுமன்ற குழுக்களின் நியமனத்தை தாமதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம். உதாரணமாக, பெயர்களை சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டால், அரசாங்கம் தாமதப்படுத்தலாம். அது ஏற்கெனவே நடந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்கே நிதி தொடர்பான அதிகாரம் உள்ளது. ஆனால் எவ்வாறு கடன் மீளச் செலுத்துவது என்றோ பணத்தை எவ்வாறு பெறுவது என்றோ கூறவில்லையெனத் தெரிவித்த அவர், இந்தியாவுடன் 1.4 பில்லியன் டொலர் மதிப்புள்ள எரிபொருள், மருந்து மற்றும் பிற தேவைகள் போன்ற பொருட்களை தூதரகங்கள் மூலம் பரிமாறிக்கொள்ள பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கியுள்ளது என்று கேள்விப்படுகிறோம் என்றார்.

18 ஆம் திகதி பாராளுமன்றம் ஆரம்பிக்கும் போது புதிய தொடக்கமாக அமையுமென ஆளும் தரப்பு தெரிவிக்கின்றனர் என நினைவூட்டிய அவர், ஒரு புதிய தொடக்கமாக இருந்தாலும், அட்டைகளின் தளம் ஒன்றுதான் என்கிறார்.

## எதிர்க்கட்சியின் கருத்துகள் நகைப்புக்குரியன

இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. இந்த விடயம் தொடர்பில் விவாதங்களை முன்வைக்க விரும்பினால் அடுத்தாண்டு ஜனவரி 12 ஆம் திகதி எதிர்கட்சி முன்வைத்தால் அதற்கான காரணங்களை நாம் தெரிவிப்போம் என்றார்.

இதேவேளை, யுகதனவி ஒப்பந்தம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர், அவர்கள் காணாத ஒப்பந்தத்துக்கு கையை உயர்த்தியிருப்பார்கள் என நினைக்கிறீர்களா, அப்படி கண்ணில் காணாத ஒன்றுக்கு அவர்கள் கையை உயர்த்தியிருந்தால் அது தவறு தானே. எனவே அதற்காக அவர்களை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்றார்.

அமைச்சரவை பத்திரம் என்பது புத்தக வடிவிலானது. சாதாரண பேப்பர் அல்ல. சம்பந்தப்பட்ட அமைச்சர் அதனை முழுமையாக வாசித்து அது குறித்து கருத்துகளை அமைச்சரவையில் முன்வைப்பார். அத்துடன், அமைச்சரவை சந்திப்புக்கு முன்னரான முன் அமைச்சரவையின் போது அது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்ட பின்னரே அமைச்சரவையில் அனுமதி பெறப்படும் என தெரிவித்தார். ஏதாவது ஒன்றை செய்யும் போது நேரம் காலம் பார்க்க மாட்டார்கள். எமக்கு பணம் தேவையாயின் அதனை ஒரு பகுதியை விற்பதில் தவறில்லை என்றார்.

## யாழ். மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக, மேயர் அணியை சேர்ந்த 10 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை சேர்ந்த 11 உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சியை சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த உறுப்பினர் என 24 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 3 உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த 2 உறுப்பினர்களுமென 21 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

இதற்கமைய, யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

## மண்ணுக்குள் பால் வார்ப்பு

குறித்த நிறுவனத்தின் வளாகத்தில் பெக்கோ இயந்திரத்தால் தோண்டப்பட்ட குழியில் இந்தப் பால் பக்கெட்டுகள் புதைக்கப்பட்டுள்ளதாக, அங்கிருக்கும் தொழிற்சங்கம் ஒன்று முன்வைத்த குற்றச்சாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பினர், பிரிவுகளிலிருந்து இது தொடர்பான தகவல்களைச் சேகரித்து அதனை விசாரிக்க உத்தரவிட்டுள்ளதாகவும் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்துள்ளார். நாட்டில் பால்மாவுக்குப் பாரிய தட்டுப்பாடு காணப்படும் நிலையில், பால்மா இறக்குமதிக்கு டொலர் பற்றாக்குறை காணப்படும் சிக்கலுக்கு அனைத்து தரப்பினரும் முகங்கொடுத்துள்ள சந்தர்ப்பத்தில் எவ்வித பொறுப்புமின்றி இவ்வாறு திரவப்பாலை வீணாக்கியமை தொடர்பில் அந்த நிறுவனத்தின் தொழிற்சங்க உறுப்பினர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். குறித்த நிறுவனமானது ஆரம்பத்தில் அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனமாக காணப்பட்டதுடன், தேசிய பால் உற்பத்தியாளர்களின் பால் உற்பத்தியை அதிகமாக கொள்வனவு செய்யும் நிறுவனமாகவும் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## குறுகிய அரசியல் நலன்களுக்காக போராடவில்லை

அவர்களின் போர்க்குணம் இன்றும் இளமையாக உள்ளது. தொழிலாளர்களின் போராட்டக் களத்தில் இன்றும் முன்னணியில் இருப்பவர்கள் இவர்கள்தான் என்பதைப் பார்க்கிறோம். இன்று உழைக்கும் மக்கள் அனுபவிக்கும் பல உரிமைகள் மற்றும் சலுகைகள் இந்த தலைவர்களின் அர்ப்பணிப்பிலிருந்து பெறப்பட்ட உரிமைகள் மற்றும் சலுகைகள் என்று புதிதாகக் கூற வேண்டியதில்லை. தொழிற்சங்கப் போராட்டம் என்பது குளிரூட்டப்பட்ட அறையிலிருந்து செய்யக்கூடியதொன்றல்ல. அடிவாங்குவதற்கும் நேரிடும். சிறையில் அடைபடவும் நேரிடும். இன்று இங்குள்ள தொழிலாளர் தலைவர்களுக்கு அது குறித்து புதிதாகக் கூற வேண்டிய அவசியமில்லை. இந்த தலைவர்களில் பலர் உழைக்கும் மக்களின் வியர்வை மற்றும் கண்ணீருக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்திருந்தாலும், அவர்கள் தங்களுக்கு எதுவும் செய்யவில்லை. அதற்காக நேரத்தையும், உழைப்பையும் மட்டுமின்றி செல்வத்தையும் அர்ப்பணிக்கும் தொழிலாளர் தலைவர்கள் இருக்கிறார்கள். உயிரை பணயம் வைத்து இரவு பகலாகப் போராடிய இவர்கள் அடையும் ஒரே திருப்தி உழைக்கும் மக்களின் தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுப்பது தான் என்றார்.

## உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாது

2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து வேலைத்திட்டங்களும் நிறைவடைந்துள்ளன. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளது என்றார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை செலுத்தும் பணிகளில் ஜனாதிபதி சிறப்பாகச் செயற்பட்டதாலேயே நாம் அனைவரும் வாழ்வதற்கான உரிமையை தற்போது பெற்றுள்ளோம் எனவும் கூறினார்.

மேலும் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளி மக்களை சிரமப்படுத்தவே முயற்சிக்கிறார்கள்.

எந்தவொரு காரணங்களுக்காகவும் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் கூறினார்.

## சிங்கள ஆணையை ஏற்க மறுத்தார் மனோ

கொஹுவளை வலய பொலிஸ் நிலையம் மூலமாக, தமது இல்லத்துக்கு, கொண்டு வந்து தரப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அழைப்பாணை முழு சிங்கள மொழியில் மாத்திரம் இருந்துள்ளது. அதை தமிழ் மொழியில் அனுப்புமாறும், அதுவரை அதை ஏற்று, தன்னால் விசாரணைக்கு சமூகமளிக்க முடியாது என்றும், தமிழ் மொழியிலான ஒரு மின்னஞ்சல் பதில் கடிதத்தை, விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு, மனோ கணேசன் எம்.பி அனுப்பி வைத்துள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி ஊடகங்களுக்கு கூறியுள்ளதாவது,

இந்த அழைப்பாணை முழுக்க சிங்கள மொழியில் மாத்திரம் இருக்கின்றது. இந்நிலையில் இதை ஏற்று என்னால், விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளுக்கு வர முடியாதென அறிவித்து விட்டேன். அத்துடன் எனக்கு சிங்கள மொழியில் இந்த அழைப்பாணை அனுப்பி இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, அரசியலமைப்பையும் சுட்டிக்காட்டி உள்ளேன் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார். எதுவானாலும் முதலில் தமிழ் மொழியில் இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அழைப்பாணை வரட்டும். அப்புறம் விசாரணைகளை அவசியமானால் சந்திப்பேன். ஆனால், அங்கேயும் பிழையில்லா தமிழ் மொழியில் இவர்கள் எனது வாக்குமூலத்தை எழுதி பதிவு செய்ய வேண்டும் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## நீதிமன்றத்தின் கோரிக்கைக்கு லிட்ரோ நிறுவனம் இணக்கம்

சமூக ஆர்வலர் நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ருவான் பெர்னாண்டோ, சம்பத் விஜேரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்கண்ட விடயம் அறிவிக்கப்பட்டது. லிட்ரோ நிறுவனத்தின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசூரிய, தனது சேவைபெறுநர், சந்தையில் வெளியிடப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். மேலும், உள்நாட்டு எரிவாயுவின் கலவை தொடர்பில் ஆலோசிக்க தர நிர்ணய கட்டளைகள் நிறுவகத்தின் அதிகாரிகள் தலைமையில் டிசெம்பர் 20 ஆம் திகதி கூட்டம் ஒன்று நடத்தப்படும்.

தற்போது தர நிர்ணய கட்டளைகள் நிறுவகத்தால் பச்சை சமிக்ஞை காட்டப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மட்டுமே லிட்ரோ நிறுவனம் விநியோகிக்கிறது. எதிர்காலத்தில், லிட்ரோ நிறுவனம், நிறுவகம் அறிமுகப்படுத்திய தரங்களுக்கு இணங்க, சிலிண்டர்களை விநியோகிக்க நடவடிக்கை நிறுவகம் எடுக்கும்.

அத்துடன், உள்ளீட்டுக் கலவையை குறிக்கும் வகையில் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களில் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு அவரது சேவை பெறுநர் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி விடயம் தொடர்பில் நீதிமன்றில் பிரமாணப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற குழாம், லிட்ரோ நிறுவனத்துக்கு உத்தரவிட்டதுடன், மனுவை இன்று (16) விசாரணைக்கு எடுக்க தீர்மானித்தது. அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர், தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராக குற்றவியல் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் மனுதாரர் கோரியுள்ளார்.

## விஜயவீரவுக்கு நடந்தது....

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவிடம் வினவியிருந்தார்.

1989.11.12 அன்று கைது செய்யப்பட்டதாக கூறும் ரோஹன விஜயவீரவின் மரணம், இயற்கையானதா? அல்லது படுகொலையா எனக் கேள்வி எழுப்பியதோடு, படுகொலை எனின், நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட வழக்கு தீர்ப்பு உள்ளதா எனவும் வினவியிருந்தார்.

மேலும், ரோஹண விஜயவீரவின் மரணம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள், தலைவர் ஒருவர் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனரா? எனவும் வினவியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு இரு வாரங்களில் பதிலளிப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபைக்கு அன்று அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் தமிழ்மிரருக்குக் கருத்து தெரிவித்த லலித் எல்லாவல எம்.பி, அடுத்த பாராளுமன்ற கூட்டதொடரில் இதற்கான பதில் நிச்சயமாகக் கிடைக்கும். நான் மாகாண சபை உறுப்பினராக இருக்கும் போதும் இது தொடர்பில் பேசியிருக்கிறேன். ரோஹன விஜயவீரவை உண்மையில் படுகொலை செய்துள்ளனர் என்றார்.

எனினும், இது தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க எடுத்த நடவடிக்கை எதுவும் இல்லை. பாராளுமன்றத்தில் கூட இது தொடர்பில் அவர் வாய்திறந்ததில்லை. எனவே ரோஹண விஜயவீரவின் கொலை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்க முடியுமா? என்பதை அறியவே நான் இந்த விடயத்தை பாராளுமன்றத்தில் வினாவாக எழுப்பியுள்ளேன்" என்றார்.

## "கண்டால் வரச் சொல்லுங்க"

எந்வோர் ஊடகத்தில் என்றாலும் பரவாயில்லை. இந்தப் பகிரங்க விவாதத்துக்கு வருவதற்கு நானும் இணக்கம் தெரிவித்திருந்தேன்.

ஆனால், இது வரை இதற்கு சாதகமான பதில் நஸீர் அஹமட்டிடம் இருந்து வரவில்லை எனத் தெரிவித்துள்ள சாணக்கியன், சவால் விடுவது முக்கிமல்ல. அந்தச் சவாலை சம்பந்தப்பட்டவர் ஏற்று வரும் போது, அதற்கு முகம் கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்றார்.

எனவே, முடிந்தால் கண்டா வரச் சொல்லுங்க, அவரை கையோடு கூட்டிவாருங்கள் என ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

# நாடு வீழ்ந்து கிடக்கிறது

அனைத்து தேசிய உற்பத்திகளும் பின்னோக்கிச் சென்றுள்ளதால், நாடு படுமோசமான நிலையில் வீழ்ந்து கிடக்கிறதென தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ விவசாயம், தொழிற்றுறை, ஆடைத்தொழிற்றுறை என அனைத்து தேசிய உற்பத்திகளும் பின்நோக்கிச் சென்றுள்ளன என்றார்.

எனவே இதனை இப்போதாவது புரிந்துகொண்டு நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களுக்கு செல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

**“தேசிய தொழிற்றுறையை இலக்காகக் கொண்ட கடன் இல்லாத நாட்டை எமது பரம்பரையில் உருவாக்க முடியாதுபோனாலும், எதிர்காலத்தில் உருவாகும் எமது பரம்பரையினருக்காக விட்டுச் செல்ல வேண்டும்**

தேசிய தொழிற்றுறையை இலக்காகக் கொண்ட கடன் இல்லாத நாட்டை எமது பரம்பரையில் உருவாக்க முடியாதுபோனாலும், எதிர்காலத்தில் உருவாகும் எமது பரம்பரையினருக்காக விட்டுச் செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.



## 1953க்கு நாடு திரும்பிவிட்டது

### தவறைத் திருத்தவும்



1953ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்கு நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கும் தேவலேஹிந்த அஜித தேரர், இன்னும் ஓரிரு மாதங்களில் நாடு வங்குரோத்து நிலைமைக்கு செல்லும் எனவும் எச்சரித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நல்லாட்சி அரசாங்கத்தால் விற்பனை செய்யப்படும் நாட்டின் சொத்துகளை வாங்க வேண்டாம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதனை திரும்பப் பெற்றுக்கொள்வோமென தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த காலங்களில் கூறினார்.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டின் பெறுமதிக்க வளங்கள், துறைமுக முனையங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மின் உற்பத்தி நிலையத்தை திருட்டுத்தனமாக விற்பனை செய்ய முயற்சித்தார்கள். அந்த ஒப்பந்தத்தை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தினார்.

இதுபோன்ற செயற்பாடுகள் நாட்டுக்கு நல்லதல்ல. நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். இன்னும் ஓரிரு மாதங்களில் நாடு வங்குரோத்து நிலைக்கு செல்லும்.

மத்திய வங்கி, ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்போவதாக பொய்கூறியே அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது. ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் தான்தோன்றித்தனமாக செயற்படுகிறார்கள்.

இதேவேளை, 1953ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நிலைமைகளுக்கு நாடு திரும்பியுள்ளது. எனவே நாட்டு மக்கள் அறிபூர்வமாகச் சிந்திக்க வேண்டும். மக்கள் செய்த தவறே நாட்டின் இந்நிலைமைக்குக் காரணம். எனவே அந்தத் தவறை மக்கள் சரி செய்ய வேண்டும்.

விஞ்ஞானப்பூர்வமான திட்டங்களை முன்வைத்து செயற்படும் தலைவர்களையே எதிர்காலத்தில் மக்கள் தெரிவு செய்ய வேண்டும் எனவும் தேவலேஹிந்த அஜித தேரர் கோரிக்கை விடுத்தார்.

## கட்டைபறிச்சானில் மோட்டார் குண்டு மீட்பு

■ தீஷான் அஹமட்

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைபறிச்சான் இறால் பாலத்திலிருந்து வெடிக்காத நிலையில் காணப்பட்ட 60 மில்லி மீற்றர் ரகம் கொண்ட மோட்டார் குண்டொன்று நேற்று (15) புதன்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, சர்தாபுர விசேட அதிரடிப்படையினரால் இக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

கட்டைபறிச்சான் இறால் பாலத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் இந்த மோட்டார் குண்டு சிக்குண்டுள்ளது.



இதனையடுத்து அம் மீனவரால் சம்பூர் கடற்படையினருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சர்தாபுர விசேட அதிரடிப்படையினர் மோட்டார் குண்டை மீட்டுள்ளனர்.

## அத்தியாவசிய பொருட்கள் துறைமுகத்தில் தேக்கம்

அத்தியாவசிய பொருள்களை ஏற்றிவந்த 1,500இக்கும் மேற்பட்ட கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கும் அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்வோரின் சங்கம், இந்தக் கொள்கலன்களை துறைமுகத்திலிருந்து விடுத்துக்கொள்வதிலும் காலதாமதம் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடுகள் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் நாளொன்றுக்கு வெறும் 100 கொள்கலன்களே துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படுவதாகவும் அச்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அரிசி, பருப்பு, சீனி, கடலை, மிளகாய்த் தூள் ஆகியவற்றை இறக்குமதி செய்த ஆயிரத்துக்கும் அதிகமான கொள்கலன்களே இவ்வாறு கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.



இதற்கு முன்னரும் இப்பொருள்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடந்த நிலையில் அவற்றை உடனடியாக விடுவிக்க வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியிருந்தார்.

## உரிய நேரத்தில் கிடைக்காத உரம் பயனற்றது



உரிய நேரத்தில் உரத்தை வழங்காது, பிறிதொரு நேரத்தில் உரத்தை வழங்குவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை எனத் தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, உர விடயத்தில் அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலையே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் விவசாயிகளை சந்தித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்கம் விவசாயிகளுக்கு உரத்தை வழங்குவதாகக் கூறுகிறது. ஆனால் இதுவரையில் விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை. சரியான நேரத்தில் உரத்தை வழங்காது, பிறிதொரு நேரத்தில் வழங்குவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. உர விடயத்தில் விவசாய அமைச்சர் உள்ளிட்ட அரசாங்கம் எடுத்த தீர்மானத்தையே நடைமுறைப்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது; இதுவே உண்மை என்றார்.





**ஆர்ப்பாட்டம்...**

கேகாலை, ரங்வல ஆயுர்வேத வைத்தியசாலையின் கனிஸ்ட ஊழியர்கள் 7,500 ரூபாய் கொடுப்பனவை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (15) எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## மக்கள் ஆட்சிக்காகவே மணிவண்ணனுக்கு ஆதரவு

மக்கள் ஆட்சியை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பம் பறிக்கப்படாதிருப்பதற்காவே யாழ். மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவை வழங்கி வெற்றியடையச் செய்திருந்தோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி, மக்கள் மத்தியில் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்பதை முன்னிறுத்தியே, யாழ். மாநகர சபையின் வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவை வழங்கியதாக அக்கட்சியின் யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை மேயர் மணிவண்ணன் நேற்றைய தினம் (15) சபையில் முன்வைத்திருந்த நிலையில் அதை தோற்கடிப்பதற்கான முயற்சிகள் பலலதரப்பினராலும் முன்வைக்கப்பட்டிருந்தது எனவும், குறுகிய சுயநலன்களுக்கு இடங்கொடாது மக்கள் ஆட்சி தொடர்ந்தும் எமது யாழ். மாநகர சபையில் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அதற்கு ஆதரவு வழங்கியதாகவும் தெரிவித்துள்ளனர்.




**250 கிலோ கிராம் போதைப்பொருளுடன்**

## 06 வெளிநாட்டவர்கள் சிக்கினர்

இலங்கையின் தென்கடல் பகுதியில் சர்வதேச கடல் எல்லையில் வைத்து, 2,509 மில்லியன் பெறுமதியான 250 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் ஈரானிய பிரஜைகள் ஐவரும், பாகிஸ்தான் பிரஜையொருவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்கடற் பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட பல நாள் சுற்றிவளைப்புகளின் பலனாக இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

கடற்படையினரால் மீட்கப்பட்ட போதைப்பொருள் நேற்று (15) கரைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய போதைத் தடுப்புப் பொலிஸ் பிரிவினருடன் இணைந்து இப்போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

உரம் என்கிற பெயரில் 250 பக்கட்டுகளில் அடைத்து நாட்டுக்குள் இப்போதைப்பொருள் கடத்தி வர முயற்சிக்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.



## வெளிநாட்டவர்கள் நால்வர் கைது

■ டி.கே.ஜீ.கபில

போலியான ஆவணங்கள் ஊடாக தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி பிரான்ஸ் ஊடாக ஜெர்மனி, மெக்சிக்கோவுக்கு தப்பிச் செல்ல முயன்ற வெளிநாட்டவர் நால்வர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவரும், கியூபாவைச் சேர்ந்த மூவருமே இவ்வாறு விமான நிலையத்தின் வெளியேறும் பகுதியில் உள்ள குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள கியூபா பிரஜைகள் மூவரும் இலங்கைக்கு வந்து, இலங்கையிலிருந்து மெக்சிகோவுக்கு சென்று குடியுரிமையை பெற்றுகொள்ள திட்டமிட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

**“கியூபா பிரஜைகள் மூவரும் இலங்கைக்கு வந்து, மெக்சிகோவுக்கு செல்லவும் பாகிஸ்தான் பிரஜை அவரது சகோதரரின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி ஜேர்மன் ஊடாக பிரான்ஸ்க்கு பயணிக்கவும் முயற்சித்துள்ளார்கள்**

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் பிரஜை அவரது சகோதரரின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி ஜேர்மன் ஊடாக பிரான்ஸ்க்கு பயணிக்க முயற்சித்துள்ளார்.




**விவாதிக்க**

## தொலைக்காட்சி, நேரத்தை தெரிவு செய்க

### சாணக்கியனுக்கு நசீர் அஹமட் கடிதம்

தமிழத் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுடன் விவாதிப்பதற்கான தொலைக்காட்சி, பொருத்தமான நேரத்தை தெரிவு செய்வது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட், சாணக்கியனுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிப்பிரச்சினை தொடர்பில் விவாதிப்பதற்கு தன்னால் விடுக்கப்பட்ட அழைப்பை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி இரா.சாணக்கியன் ஏற்றுக்கொண்டமைக்கு அவருக்கு நன்றியையும் தெரிவித்துள்ளார்.

தங்களுக்கிடையிலான விவாதங்களை மக்கள் அதிகமாகப் பார்க்கக்கூடிய பிரபல்யமான தொலைக்காட்சிகளின் அரசியல் நிகழ்ச்சிகளில் நடத்துவதே சிறப்பானது எனவும், எனவே எதிர்வரும் வாரங்களில் இவ்வாறான நிகழ்ச்சி ஒன்றில் நாம் பங்கேற்க வசதியாக, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் வகையில் சாணக்கியனின் முடிவை எதிர்பார்க்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.



கைத்துப்பாக்கி, மகசின்கள் மீட்பு; காரைதீவு வீட்டில்

# தீவிர சோதனை முன்னெடுப்பு

## விடுதலைப் புலிகளுடன் நெருங்கிச் செயற்பட்டவர் கைது

■ பாறுக் ஷிஹான், கனகராசா சரவணன்





கைத்துப்பாக்கி மற்றும் 2 மகசின்கள் மீட்கப்பட்ட காரைதீவு, கொம்புச் சந்திக்கருகாமையில் உள்ள வீடு மற்றும் அதனை அண்டிய சூழலில் தீவிர சோதனை நடவடிக்கைகளை பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்டுள்ளனர்.

இத்தேடுதல் நடவடிக்கையில் விசேட அதிரடிப்படையினர், பொலிஸ் தடயவியல் பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் எனப் பலரும் மோப்ப நாய் சகிதம் பங்கேற்றுள்ளனர்.

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைதீவு, கொம்புச்சந்தி பகுதியில் கைத்துப்பாக்கி மற்றும் 2 மகசின்களை, நேற்று முன்தினம் (14) மாலை நடத்திய தேடுதலில் பொலிஸ் குழுவினர் மீட்டனர்.

விடுதலைப் புலிகளால் பாவிக்கப்பட்டதாக நம்பப்படும் வெளிநாட்டுத் தயாரிப்பான மைக்ரோ 9 எம்.எம். கைத்துப்பாக்கியே, இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் இவ்வாறு மீட்கப்பட்டது.

குறித்த வீட்டினுள் துப்பாக்கியை தம்வசம் வைத்திருந்ததாக தெரிவிக்கப்படும் 44 வயது மதிக்கத்தக்க சந்தேகநபர் கைதாகியுள்ளதுடன், அங்கிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் மகசின்கள் சம்மாந்துறை பொலிஸார் எடுத்து சென்றுள்ளனர்.

கைதாகிய சந்தேகநபர், கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிச் செயற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைப்பற்றப்பட்ட துப்பாக்கியை 5 இலட்சம் ரூபாக்கு முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து சந்தேகநபர் பெற்றுக்கொண்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.



மட்டு. புதிய ஆணையாளர்

## கடமைகளை பொறுப்பேற்றார்

■ வா.கிருஸ்ணா, ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளராக நிர்வாக சேவை 01 அதிகாரியான பொறியியலாளர் ந.சிவலிங்கம், தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு நேற்று (15) காலை வருகை தந்த புதிய ஆணையாளரை, மாநகர சபையின் பிரதி மேயர் க.சத்தியசீலன் மற்றும் உத்தியோகத்தர்கள் வரவேற்றனர்.

அதனை தொடர்ந்து ஆணையாளர் கையெழுத்திட்டு, தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தி.சரவணபவன், பிரதி மேயர், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மாநகர சபை உத்தியோகத்தர்கள் முன்னிலையில் அவர் கடமையைப் பொறுப்பேற்றார்.

இலங்கை நிர்வாக சேவை (தரம் -1) உத்தியோகத்தரான இவர், உலக வங்கித் திட்டத்திலும், பின்னர் மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இதுவரை மட்டக்களப்பு மாநகர ஆணையாளராக பதவி வகித்த மா.தயாபரனுக்கு பதிலாக புதிய ஆணையாளராக ந.சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏறாவூர் பட்ஜெட்

## ஏகமனதாக நிறைவேற்றம்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

ஏறாவூர் நகர சபையின் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான சுமார் 164 மில்லியன் ரூபாய்க்குரிய வரவு - செலவுத் திட்டம் எவ்வித எதிர்ப்பின்றி, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக நகர சபைச் செயலாளர் எம்.ஆர் சியாஹுல்ஹக் தெரிவித்தார்.

அச்சபையின் விசேட சபைக் கூட்டமும் பாதீடு சமர்ப்பிப்பும், சபைத் தலைவர் எம்.எஸ். நழிம் தலைமையில், நேற்று (15) நடைபெற்றது.

இது புதிய தலைவரின் இரண்டாவது பாதீடு சமர்ப்பித்தலாக அமைந்திருந்தது.

இக்கூட்டத்தில் ஏறாவூர் நகர சபையின் மொத்தமுள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் 17 பேரில் 14 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

ஏறாவூர் நகர சபையில் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் சுயேட்சை குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள் முறையே 5, 4, 3, 2, 1, 1 மற்றும் 1 என்ற அடிப்படையில் ஆசனங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



2022ஆம் ஆண்டுக்கான பாதீடுகள்:

## குச்சவெளியில் வெற்றி; கிண்ணியாவில் தோல்வி

■ ஹஸ்பர் ஏ ஹலீம், அ.அச்சுதன், எப். முபாரக், ஏ.எம்.கீத்



குச்சவெளி பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

குச்சவெளி பிரதேச சபையின் 45ஆவது சபை அமர்வில் தவிசாளர் ஏ.முபாறக்கினால் நேற்று முன்தினம் (14) கொண்டுவரப்பட்ட வரவு - செலவுத் திட்ட பிரேரணை, ஆதரவாக 15 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் பதிவு செய்யப்பட்டு, அறுதிப் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு, திண்மக் கழிவகற்றல், வாழ்வாதாரம், சுகாதார பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி, மகளிர் அபிவிருத்தி, சுற்றுலாத்தலங்களின் அபிவிருத்தி, கொவிட்19 பாதுகாப்பு நடவடிக்கைகள், சட்டவிரோத கட்டடங்களுக்கான நடவடிக்கை போன்றன கொண்டு வரப்பட்டிருந்தன.

இவ் வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை எவையும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிண்ணியா நகர சபையின் தவிசாளர் சாஹுல் ஹமீட் நளீமினால் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கை, வாதப் பிரதிவாதங்களின் பின்னர் தேற்கடிக்கப்பட்டது.

13 பேரைக் கொண்ட குறித்த சபைக் கூட்டத்தின்போது பாதீட்டுக்கு ஆதரவாக தவிசாளர், உப தவிசாளர் மற்றும் 03 உறுப்பினர்களும் அடங்கலாக 05 பேர் வாக்களித்தனர்.

எதிராக 07 உறுப்பினர்கள் வாக்களித்து தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட அறிக்கையை 02 மேலதிக வாக்குகளால் தோல்வியடையச் செய்தனர்.

மாஞ்சோலையில்


## வெடித்தது கேஸ் அடுப்பு

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாஞ்சோலை பிரதேசத்தில் நேற்று (15) காலை 8 மணியளவில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

சமைத்துக் கொண்டிருக்கின்ற போது திடீரென சமையல் அடுப்பு வெடித்துள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். சம்பவத்தின் போது, எவ்விதமான உயிரிழப்புகளும் ஏற்படவில்லை.

குறித்த வீட்டுக்கு விரைந்த கிண்ணியா பொலிஸார், சேதங்களைப் பார்வையிட்டதுடன், சேத விவரங்களையும் பெற்றுச் சென்றனர்.



பருத்தித்துறைமுனைக்கு

# சீன அதிகாரிகள் விஜயம்






■ எஸ்.நிதர்ஷன், எஸ். தில்லைநாதன், என்.ராஜ்

இலங்கைக்கான சீன தூதரக அதிகாரிகள், நேற்று (15), யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டனர். இதன்போது, அவர்கள் பருத்தித்துறைமுனைப் பகுதியைப் பார்வையிட்டனர்.

சீன தூதுவர் கீ சென்ஹொங் தலைமையில் சீன அதிகாரிகள், இரண்டு நாள்கள் பயணமாக வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நயினாதீவு கடலில்

## முதியவர் சடலமாக மீட்பு

■ செந்தூரன் பிரதீபன்

நயினாதீவு கடலில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், நயினாதீவு - 3ஆம் வட்டாரப் பகுதியில், நேற்று (15) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக, ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தவர், 2ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த நடராஜா தர்மபாலன் (வயது 59) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சென்று விட்டு வருவதாகச் சென்றவர், கடந்த 9 நாள்களாக காணாமல் போயிருந்த நிலையிலேயே, சடலமாக மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை, ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துரத்தித் துரத்தி இளைஞன் மீது வாள்வெட்டு

■ எஸ்.நிதர்ஷன், செந்தூரன் பிரதீபன்






யாழ்ப்பாணம், பரமேஸ்வர சந்திப் பகுதியில், நேற்று (15) காலை 10.30 மணியளவில், இளைஞன் ஒருவரை, கும்பல் ஒன்று துரத்தித் துரத்தி வாளால் வெட்டியுள்ளது.

சன நடமாட்டம் அதிகமாக காணப்படும் குறித்த பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில், அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. யாழ். நகர் பகுதியை நோக்கி குறித்த இளைஞன் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்த நால்வர், அந்த இளைஞனை, பரமேஸ்வர சந்தியில் வைத்து வழிமறித்து, கடுமையான வாள்வெட்டை மேற்கொண்டனர்.

கும்பலின் தாக்குதலில் இருந்து தப்பித்து, பல்கலைகழகம் பக்கமாக அவ்விளைஞன் தப்பியோடிய போதும், துரத்தித் துரத்தி வாளினால் வெட்டப்பட்டுள்ளார்.

வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இளைஞன், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்துக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றமையானது மாணவர்கள் மத்தியில் அச்சநிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி கமெராவின் உதவியுடன், மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ரயிலுடன் மோதுண்டு

## இளைஞன் படுகாயம்

■ செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த ரயிலுடன், இளைஞன் ஒருவர் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இவ்விபத்து, சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக, நேற்று (15) காலை 9.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞனே, இவ்வாறு படுகாயங்களுக்குள்ளானார். இவர், செவிப்புலன் அற்றவர் என தெரிவிக்கப்படுகின்றது.

> **செவிப்புலன் அற்ற இவர், ரயில் தண்டவாளத்தின் கீழிருந்து மதுபானம் அருந்தி கொண்டிருந்த பொழுது, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்த ரயில், இவரை மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது**

படுகாயமடைந்த இளைஞன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் தண்டவாளத்தின் கீழிருந்து மதுபானம் அருந்தி கொண்டிருந்த பொழுது, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்த ரயில், இவரை மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளுநரின் கூட்டத்துக்கு

## ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

■ க. அகரன்

வவுனியா பல்கலைக்கழகத்தில், வடமாகாண ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை செய்தி சேகரிப்பதற்கு, ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக சமூகம் மற்றும் வவுனியா கல்வியியலாளர் சமூகத்துடன், வடமாகாண ஆளுநர் சந்திப்பொன்றை, நேற்று (15) மேற்கொண்டிருந்தார். இதன்போது, ஊடகங்கள் செய்தி சேகரிக்க அனுமதி கோரியிருந்த நிலையில், வவுனியா பல்கலைக்கழகத்துக்கு ஊடகவியலாளர்கள் சென்ற போதிலும், அங்கிருந்த காவலர்கள் கூட்டம் இடம்பெற்ற மண்டபத்தினுள் செல்ல அனுமதி மறுத்திருந்தனர்.

எனினும், கூட்டம் நிறைவடைந்த பின்னர், ஆளுநரை ஊடகவியலாளர்கள் அணுகி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கேட்டபோது, பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாகவும் துணைவேந்தரிடம் கேட்குமாறும் தெரிவித்துவிட்டு சென்றிருந்தார்.

இந்நிலையில், ஊடகவியலாளர்களை கூட்டம் இடம்பெறும் மண்டபத்துக்குள் செல்ல, ஆளுநரை காரணம் காட்டி, பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களே தடையை ஏற்படுத்தியிருந்தமை தெரியவந்துள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை மீண்டும்

## சுயேட்சைக் குழு வசமானது

■ எஸ்.நிதர்ஷன்

> **நேற்று (15), புதிய தவிசாளருக்கான தெரிவின்போது, என். செல்வேந்திரா மீண்டும் தவிசாளரானார்**

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளராக, என். செல்வேந்திரா, மீண்டும் ஏகமனதாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு-செலவுத் திட்டம், கடந்த மாதம், தவிசாளரான என். செல்வேந்திராவால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தோற்கடிக்கப்பட்டது.

அதனை அடுத்து, நேற்றைய தினம் (15), புதிய தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது.

இதன்போது மீண்டும் சுயேட்சை குழு சார்பில் என். செல்வேந்திரா போட்டியிட்ட நிலையில், மீண்டும் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# மகள் துஷ்பிரயோகம்; தந்தை கைது

சுமணசிறி குணதிலக

வாய் பேசமுடியாத இருபது வயதான தனது இளைய மகளை பல வருடங்களாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வந்த 52 வயதான தந்தையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தல பிரதேசத்தைச் சேர்ந்த தனது மூத்த சகோதரியின் வீட்டுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் குறித்த வாய் பேசமுடியாத யுவதி சென்றுள்ளார்.

இதன்போது கதிர்காமத்திலுள்ள தாம் பிறந்த வீட்டுக்கு செல்லுமாறு, மூத்த சகோதரி தெரிவித்த போது, தனக்கு அங்கு செல்ல முடியாதென்றும் தந்தை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதாக தனது மொழி நடையில் சகோதரியிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 12 வயதிலிருந்து தந்தையால் தான் இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதாகவும் பாதிக்கப்பட்ட யுவதி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சகோதரி புத்தல பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, தந்தை கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

பாதிக்கப்பட்ட யுவதி வைத்திய பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதுடன், கதிர்காமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

மாகாண சபைத் தேர்தலை நடத்த

# பதுளை தயார்

எம். செல்வராஜா

மாகாண சபைத் தேர்தல்களை 2022இல் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டு, தயார் நிலையில் இருக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர், தம்மிடம் கேட்டுள்ளாரென்று, பதுளை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இந்திக்க ஹத்துருசிங்க தெரிவித்தார்.

பதுளை மாவட்ட தேர்தல் திணைக்கள கேட்போர் கூடத்தில், நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

“தேர்தல்களைப் பற்றியும், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் செயற்படும் விதம் குறித்தும் வாக்காளர்களாகிய மக்கள் பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர். அதனால் அவர்கள் தேர்தல்களைப் புறக்கணிக்கும் செயற்பாடுகளையும் பல்வேறு வகைகளில் முன்னெடுக்கின்றனர். இப் புறக்கணிப்பினை தடுக்கும் வகையிலும், வாக்களிப்பில் ஈடுபட வேண்டியது தமது தலையாய கடமையென்பதையும் மக்களுக்கு தெளிவுபடுத்தும், விழிப்புணர்வு வேலைத்திட்டங்களையும் தேர்தல் திணைக்களம் என்ற வகையில் வெற்றிகரமாக நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதன் பிரதிபலனாக



கடந்த தேர்தல்களில் வாக்காளர்களின் வாக்களிப்பு சதவீதம் அதிகரித்த நிலையில் இருந்து வருகின்றது.

வாக்காளர்களாகிய மக்களுக்கு, அவர்களின் விரக்தி நிலையினைப் போக்கி, அவர்களது வாக்குரிமையை பயன்படுத்துமாறு கோரும் வகையில், வீதி நாடகம், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவது, செயலமர்வுகள் நடத்துதல் போன்ற இன்னோரன்ன விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம். ஊடகவியலாளர்களும் எமது வேலைத்திட்டங்களுக்கு பூரண பங்களிப்புக்களை வழங்க வேண்டும்.

அடுத்த வருட ஆரம்பத்தில் தேர்தல் ஒன்றினை நடத்துவதற்கு, அனைத்து ஏற்பாடுகளையும், மேற்கொண்டிருக்கின்றோம். தேர்தல் ஆணையகம் குறிப்பிடும் திகதியில் தேர்தலை நடத்த தயாராகவுள்ளோம்” என்றார்.



நானுஓயாவில் இரண்டாவது தடவையும்

# அடுப்பு வெடித்தது

டி.சந்ரு

நானுஓயா, கிலாரண்டன் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று (15) காலை எரிவாயு கசிவு காரணமாக எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

இதனால் வீட்டில் இருந்த எவருக்கும் எவ்வித பாதிப்பும் இடம்பெறவில்லை என்றும் வீட்டின் சமையலறைக்கு சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளர்தெரிவித்துள்ளார்.

நானுஓயா பிரதேசத்தில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் இரண்டாவது முறையாகவும் பதிவாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், நானுஓயா பொலிஸாருக்கும் கிராம உத்தியோகத்தருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# தங்கச் சங்கிலியை பறிகொடுத்த ஆசிரியை

## ஒரே கிராமத்தில் இரண்டாவது சம்பவம்

ஆ.புவியரசன்

பதுளை, வீனித்தகம, கல்கெட்டிகும்புர கிராமத்தில் வசிக்கும் ஆசிரியை, தனது தங்கச் சங்கிலியை பறிகொடுத்த சம்பவம் பதிவாகியுள்ளது.

கொள்ளையரிடம் இருந்து தங்கச் சங்கிலியை பாதுகாத்துக் கொள்ள குறித்த ஆசிரியை போராடிய போது, கொள்ளையரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதியன்றும் பதுளையிலுள்ள பிரபல தமிழ் பாடசாலையொன்றில் கடமையாற்றும் குறித்த கிராமத்தில் வசிக்கும் ஆசிரியை ஒருவரது மூன்றரை பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியொன்றும் கொள்ளையிடப்பட்டிருந்தது.

குறித்த சம்பவங்கள் தொடர்பில், பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விரு சம்பவங்களிலும் சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

வேவெஸ்ஸ தோட்ட மத்திய பிரிவை அண்டி இக்கிராமங்கள் உள்ளதால், இறப்பர் தோட்டங்களை கடந்து வர வேண்டியுள்ளது. இப்பாதையில் சன நடமாட்டம் குறைவாக உள்ளதால் வெளியாரும், மதுபாவனைக்கான இடமாகப் பயன்படுத்திக் கொள்வதால் இங்குள்ள மக்கள் பாரிய அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

மலையகத்தில் ஆசிரிய உதவியாளர்களுக்கு

# ஆறு வருடங்களாகியும் நிரந்தர நியமனம் இல்லை

இரா.யோகேசன்

மலையக தோட்டப்புற பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் வகையில், 2015 ஆம் ஆண்டு ஆசிரிய உதவியாளர்கள் நியமனம் வழங்கப்பட்ட நிலையில், அதன் பின்னர் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு ஏற்ப கட்டம் கட்டமாக நியமனங்கள் வழங்கப்பட்டன.

எனினும் 6 வருடங்கள் கடந்தும் மத்திய மாகாணத்தில் நியமனம் பெற்ற ஆசிரிய உதவியாளர்கள் 306 பேருக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் ஆளுநருக்கு உடனடியாக நியமனத்தை வழங்கக்கோரி கோரிக்கையை முன்வைத்துள்ளதாக சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இவர்களுக்கான நியமனங்களை உடனடியாக வழங்கக்கோரி பல போராட்டங்களை மேற்கொண்ட போதும் இவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்காமல் காலம் தாழ்த்தி வந்த மத்திய மாகாண கல்வி அமைச்சு, நேற்று (15) திகதி நியமனம் வழங்கப்படும் என ஆசிரியருக்கு கடிதங்களை அனுப்பி வைத்தது.

தமக்கு நியமனம் கிடைக்குமென மகிழ்ச்சியோடு எதிர்ப்பார்த்த ஆசிரியருக்கு மத்திய மாகாண கல்வி அமைச்சரிடம் இருந்து நியமனம் வழங்கும் நிகழ்வு ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் கொரோனா நோய் பரவல் காரணமாக தபால் மூலம் நியமனம் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு சில நாள்களில் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டாவிட்டால், பாரிய தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல வேண்டி வரும் என மத்திய மாகாண ஆளுநர் அவர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது




## ஆர்ப்பாட்டம்...

சுகாதார பணியாளர்களின் சம்பள முரண்பாடு, பட்டதாரிகளின் சம்பளம் உள்ளிட்ட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து, பதுளை மாவட்டத்தில் சுகாதார பணியாளர்கள் ஒன்றிணைந்து, நேற்று (15) பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர். அத்துடன், பதாகைகளை ஏந்தியவாறு, பதுளை வைத்தியசாலைக்கு முன்பாக பேரணியை ஆரம்பித்து, பதுளை மாகாண சபை வரை சென்று, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ராமு தனராஜா)

ராமலிங்கபுரம் அப்படியே அழைக்கப்படுவதை

# மக்களே உறுதி செய்யவேண்டும்

## திலகர் வலியுறுத்தியுள்ளார்



மலையகத்தில் அமைக்கப்பட்ட வீடமைப்புத்திட்டங்களுக்கு மலையக முன்னோடிகளான அரசியல், தொழிற்சங்க, கல்வி, இலக்கிய, செயற்பாட்டாளர்களின் பெயர்கள் சூட்டப்பட்ட பொன்னான காலத்தை யாரும் இலகுவில் மறந்துவிடமுடியாது என தெரிவித்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ், அதனை அவ்வாறே அழைப்பதற்கும் பேணுவதற்கும் அந்த வீட்டுத்திட்ட குடியிருப்பாளர்கள் திடசங்கட்பம் கொள்ள வேண்டும் என்றார்.

ராகலை, ராமலிங்கபுரம் மக்களின் அழைப்பினை ஏற்று அங்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு முதலாவது இந்திய வீடமைப்புத்திட்டமான ‘மகாத்மா காந்திபுரம்’ பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் மக்கள் வசம் கையளிக்கப்பட்ட அதே நாளில், ராகலை- டியனில்ல தோட்டத்தில் மண்சரிவால் பலவருடகாலம் பாதிப்புற்று இருந்த மக்களுக்கு என 163 வீடுகளைக் கொண்ட புதிய கிராமத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உதவி (கண்டி) உயர்ஸ்தானிகராக கடமையாற்றி திரேந்தர் சிங்கும் நாடாளுமன்ற உறுப்பினராக நானும் கலந்து கொண்டே அந்த அடிக்கல்லை நாட்டி வைத்தோம். அன்றைய தினமே ராகலை மண்ணின் மைந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமலிங்கத்தின் நினைவாக ‘ராமலிங்கபுரம்’ என பெயர்சூட்டப்பட்டது. ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் மலையகத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

அத்தகைய பெருமை கொண்ட ராகலை மண்ணின் மைந்தனாகிய ராமலிங்கத்தின் பெயரிலேயே இந்தப் புதிய கிராமத்தின் பெயர் அழைக்கப்படுவதை இந்தக் கிராம மக்களே உறுதி செய்யவேண்டும் என்றார்.

# ரயில் மோதி தந்தை பலி




கே.சுந்தரலிங்கம்

பொடி மெனிக்கே ரயிலில் மோதி ஒரு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளதாக திம்புள்ள- பத்தனை பொலிஸார் தெரிவித்தார். கொட்டகலைக்கும் தலவாக்கலைக்கும் இடையில் சென்கிளையார் பகுதியில் குறித்த சம்பவம் நேற்று (15) பகல் இடம்பெற்றுள்ளது.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று (15) காலை புறப்பட்டு வந்த ரயிலிலேயே, குறித்த நபர் மோதுண்டுள்ளதாகவும், இவரது சடலத்தை கொட்டகலை ரயில் நிலையத்தில் ஒப்படைத்து ரயில் புறப்பட்டு சென்றதாகவும் ரயில் நிலைய உத்தியோகஸ்தர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கொட்டகலை என்ரூ தோட்டத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ரோமகிருஸ்ஷன் மோகனசுந்தரம் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

எல்பட பாடசாலைக்கு அருகிலுள்ள

# குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை

எஸ்.கணேசன்

நோர்வூட், எல்பட தமிழ் வித்தியாலயத்துக்கு அருகில் இருக்கும் மரங்களில் உள்ள, குளவி கூடுகளை அகற்ற நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் ரவி குழந்தைவேல் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நேற்று (15) காலை குறித்த பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் போது, மரத்தில் காணப்பட்ட குளவி கூடு கலைந்து, மாணவர்களை கொட்டியதில் 17 பேர் பாதிக்கப்பட்டு டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதனையடுத்து, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய பாடசாலைக்கு சென்ற நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் உட்பட குழுவினர் நிலைமையை ஆராய்ந்ததுடன், மரத்தில் இருக்கும் 5 குளவி கூடுகளையும் அகற்ற நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.



குளவி கூடுகள் அகற்றியதன் பின்னர், இன்றைய (16) தினம், பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் வழமைப்போல் நடைபெறும் என நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

குளவி கொட்டியதால்

# 17 மாணவர்கள் பாதிப்பு

## பாடசாலையும் மூடப்பட்டது

எஸ். சதீஸ்வா

கவந்தலாவ, எல்பட தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 17 மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று (15) காலை 7. 20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து, பாடசாலையும் பூட்டப்பட்டுள்ளது.

இதில் 09 மாணவர்களும் 08 மாணவிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அருகிலுள்ள மரத்திலிருந்த குளவி கூட்டின் மீது, கழுகு மோதியதால் குளவிகள் கலைந்து மாணவர்களை தாக்கியுள்ளன.

இதனையடுத்து, மாணவர்கள் அனைவரும் வீட்டுக்கு



திருப்பி அனுப்பட்டதோடு, ஹட்டன் வலையகல்வி பணிப்பாளர் ஏ.சத்தியேந்திராவின் பணிப்புரைக்கு அமைய, நேற்றைய தினம் பாடசாலை மூடப்பட்டுள்ளதாக வித்தியாலயத்தின் அதிபர் என். தியாகராஜன் தெரிவித்தார்.

# கண்களை உறுத்தினால் கழுத்துகளில் கீறல்களை தவிர்க்க முடியாது

இரு பாலார்களிலும் சிலர் உடுத்திச் செல்வதை தற்செயலாக பார்த்துவிட்டால், கண்களை சட்டென திருப்பி கொள்ளும் அளவுக்கு அவர்களின் ஆடையலங்காரங்கள் இருக்கும். இன்னும் சிலர், என்னதான் உடுத்தியிருக்கின்றனர், என்பதற்கே விளக்கம் தேடவேண்டியிருக்கும்.

கலாசாரக் கட்டுப்பாடுகளுடன் இலட்சணமாக உடுத்தும் சிலரைப் பார்த்தால், வீட்டிலிருந்த நகைகள் அத்தனையையும் அள்ளியணிந்து கொண்டு வந்திருப்பர். "இருக்கிறது போட்டுக்கொண்டு வருகின்றோம்; உங்களுக்கு என்ன?" எனக் கேட்கும் அளவுக்கு நடந்துகொள்வார்கள். சிலர் அவதானித்தும் அவதானிக்காததைப் போல இருப்பர்; இன்னும் சிலர் குறிவைத்துவிடுவர்.

வீதிகளில் தனியாகப் பயணிக்கும் பெண்களின் சங்கிலியை அபகரித்தல், தோளில் அணிந்துசெல்லும் கைப்பையை உருவி இழுத்துச் செல்லுதல், கத்தி மற்றும் ஆயுதங்களைக் காண்பித்து அச்சுறுத்தி, பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டுச் செல்லுதல் உள்ளிட்ட சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

யார் திருடன்? நல்லவன் யார் என்றெல்லாம் வகைப்படுத்திப் பார்க்க முடியாதளவுக்குத் திருடர்கள், அதிகரித்துவிட்டனர். பட்டப்பகலில் நடக்கும் சம்பவங்களின் வீடியோக்களைப் பார்க்குமிடத்து, பாதிக்கப்படும் பெண்கள் படும்பாடு மயிர்க்கூச்செறியச் செய்கின்றது. அந்தளவுக்கு மிகவேகமாக மோட்டார் சைக்கிளில் வருவோர், கைவரிசையைக் காட்டிவிட்டு, சட்டெனப் பறந்து சென்றுவிடுகின்றனர்.

மற்றையவர் கண்களை உறுத்தும் அளவுக்கு நகைகளை அள்ளியணிந்துகொண்டு தனியாகவோ, குடும்பத்தினருடனோ வீடுகளிலிருந்து வெளியே செல்வது, இக்காலத்துக்கு உசிதமானதல்ல. இவை, திருடர்களின் கண்களை உறுத்தினால், சில வேளைகளில் உயிர்களுக்குக் கூட உத்தரவாதமில்லை.

கொள்ளை, கொலை, கோவில்களை உடைத்து உண்டியல்கள், பெறுமதிமிக்க சிலைகளைக் கொள்ளையடித்தல், நிறுத்திவைக்கப்பட்ட ஓட்டோ மாயமாதல் உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

முடிச்சுமாறிகளின் கைவரிசைகளும் இடம்பெறத்தான் செய்கின்றன. எனினும், சிறுசிறு தொகையை மட்டுமே இழக்கும் சிலர், அவை தொடர்பில் பொலிஸூக்குச் சென்று முறைப்பாடுகளைச் செய்வதில்லை. அதனால், சில சம்பவங்கள் எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாமல் விடுபட்டுவிடுகின்றன.

எப்படியாவது வாழவேண்டும் எனும் நோக்கில், இவ்வாறு கைவரிசையைப் பலரும் காண்பிப்பதால், வீட்டைவிட்டு வெளியேறி, வீட்டுக்குத் திரும்பும் வரையிலும் மிகவும் அவதானத்துடன் கவனமாக இருக்கவேண்டும். கிறிஸ்மஸ், புத்தாண்டு பண்டிகை கொள்வனவுக்காக, பிரதான நகரங்களை நோக்கி, மக்கள் படையெடுப்பர்.

இதுவே, கொள்ளையர்களுக்கும் முடிச்சுமாறிகளுக்கும் வாய்ப்பாக அமைந்துவிடும். வீட்டைப் பூட்டிவிட்டு, குடும்பத்துடன் கிளம்புவதைக் கொள்ளையர்கள் அவதானிக்கக் கூடும். அதேபோல, கொள்ளையர்களின் கண்களை உறுத்துமளவுக்கு கழுத்துநிறைய, தங்க ஆபரணங்களை அள்ளி அணிந்துகொள்வதும் நல்லதல்ல.

கொள்ளையர்களின் கண்கள் உறுத்தப்படுமாயின், கழுத்துகளில் கீறல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதை நினைவில் கொண்டு, சுகாதார வழிகாட்டல்களுடன் விழிப்பாக, சென்றுதிரும்புவதை எந்நேரமும் கடைப்பிடிக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

முதியவர்களில் அநேகர், தங்களின் இளமைக் கால நினைவுகளுடன் ஐக்கியப்பட்டே இயங்குவார்கள். மேலும், முதுமையின் பொருட்டு அவர்களது தேகம் தளர்ந்து போனாலும், பழைய கம்பீரமான கற்பனை அவர்களிடம் இருந்து விலகுவதில்லை. தமது குடும்பத்தின் மீது தான் செலுத்திய ஆளுமையில் இருந்து விலகுவதும் இல்லை. நல்ல பண்புகளை ஊட்டிய, நல்ல நிலைக்கு தங்களின் சந்ததிகளை உயர்த்தியவர்கள் இவர்கள் என்பதை மறந்துவிடலாகாது. இதனால், இவர்களை எதிர்த்து, முரண்பட எந்தக் காரணங்களும் கிடையாது. பேரன், பேத்திகளுடன் பொழுதுகளைச் சந்தோஷமாகக் கழிப்போரைக் கண்டால் பூரிப்பாக இருக்கும்.

ஆனால், ஒருசில குடும்பங்களில் முதியோர்களைக் கனம் பண்ணாதவர்களும் இருக்கின்றார்கள். கிராமியப் பண்பாட்டில் வாழ்ந்தவர்கள், இன்னமும் தாத்தா, பாட்டி ஆகியோரின் அறிவுரைகளை மதித்தே வாழ்கின்றார்கள்.

முதியோரின் அனுபவ ஞானம் போற்றுதலுக்குரியது. காலநிலை, சோதிடம், விவசாயம், நாட்டு வைத்தியம் போன்றவற்றுடன், சமய கலை கலாசார பண்பாடுகளை இவர்கள் தொப்புள் கொடியாகக் கடத்தியே வருகின்றார்கள். பாட்டிமார் எதைச் சமைத்தாலும் அது நாவுக்கு பிரமாதமாகவே இருக்கும்.

நாங்கள் கற்ற ஒழுக்கம், அன்பு, பாசம் போன்றவற்றுடன் உறவுமுறைகளையும் இளைய தலைமுறைக்குச் சொல்லிக்கொடுப்போரை மறக்க முடியுமா?

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# 13ஐ திணிக்கும் டெலோ; யாருக்காக இயங்குகின்றது?



புருஜோத்தமன் தங்கமயில்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரும் தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்புகளை தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) நடத்தி வருகின்றது. யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமாக இரண்டு சந்திப்புகள் இதுவரை இடம்பெற்றிருக்கின்றன.

ஆனாலும், இந்தச் சந்திப்புகளில் பங்கெடுத்த கட்சித் தலைவர்களுக்கு இடையில், இதுவரை புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட முடியவில்லை. அதனால், மீண்டும் எதிர்வரும் வாரமளவில் கூடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டு இருப்பதாக டெலோ அறிவித்திருக்கின்றது.

இந்தச் சந்திப்புகளில் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், தற்போது முதன்மைக் கட்சியாக, அதிக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா பங்கெடுக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சந்திப்புக்கு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும், அவர் சந்திப்பைப் புறக்கணித்திருந்தார். அதனாலோ என்னவோ கொழும்புக் கூட்டத்துக்கு அவர் அழைக்கப்படவில்லை. ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கொழும்புக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான டெலோவின் தொடர் அழைப்பைப் புறக்கணிக்க முடியாமல் அவர், இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிந்ததை, அவரது நடவடிக்கைகள் மூலம் அவதானிக்க முடிந்தது.

டெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், கொழும்புச் சந்திப்புக்கான அழைப்பை, சம்பந்தனிடம் விடுத்திருக்கின்றனர். அப்போது, "கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரனை சந்திப்புக்கு அழைக்கவில்லையா" என்று சம்பந்தன் வினாவியிருக்கிறார். அதற்கு, "சுமந்திரன் கட்சித் தலைவர் இல்லை; அதனால் அவரை அழைக்கவில்லை. இது கட்சித் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு" என்று செல்வமும் சித்தார்த்தனும் பதிலளித்திருக்கிறார்கள்.

இதனை உள்வாங்கிக் கொண்ட சம்பந்தன், கொழும்புச் சந்திப்பில் டெலோ அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதன் பேச்சாளரும் கலந்து கொண்டமை தொடர்பில், "கட்சித் தலைவர்கள் கூட்டமென்றால், டெலோ அமைப்பின் தலைவரைத் தாண்டி ஏனையவர்கள் எவ்வாறு சந்திப்பில் கலந்து கொண்டிருக்கிறார்கள்" என்று நேரடியாகவே கேட்டிருக்கின்றார்.

தமிழரசுக் கட்சி அல்லது கூட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைக்காத அரசியல் சந்திப்புகளை, சம்பந்தன் விரும்புவதில்லை. அது, தம்மைத் தாண்டிய தரப்பொன்று, தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கோலொச்சக் கூடாது என்ற நோக்கிலானது.

எப்போதுமே தமிழரசுக் கட்சியைப் பிரதானப்படுத்தியே கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய அரசியலும் இயங்க வேண்டும் என்று சம்பந்தன் நினைப்பவர். அப்படியான நிலையில், டெலோ அமைப்பின் இவ்வாறான முன்னெடுப்புகளை அவர் கொஞ்சமும் இரசிக்கவும் இல்லை.

கடந்த பாராளுன்றத் தேர்தலுக்கு முன்னர் வரையில், சம்பந்தனின் நிலைப்பாடுகளுக்கு அப்பால், டெலோ எந்தத் தருணத்திலும் இயங்கியதில்லை. தமிழரசுக் கட்சி, டெலோவின் உறுப்பினர்களைக் களவாடி, தன்னோடு சேர்ந்துக் கொண்ட போதிலும் கூட டெலோ, சம்பந்தனின் சொல்லுக்கு அப்பால் கொஞ்சமும் அசைந்ததில்லை.

ஆனால், கடந்த பொதுத் தேர்தலில், கூட்டமைப்பில் வெற்றிகொள்ளப்பட்ட பத்து பாராளுமன்ற ஆசனங்களில் மூன்றை டெலோ பெற்றிருந்தது. அது, கூட்டமைப்புக்குள் மாத்திரமல்ல, தமிழ்த் தேசிய அரசியலுக்குள்ளும் தமிழரசுக் கட்சிக்கு அடுத்த நிலையில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்ற அடையாளத்தைக் கொடுத்தது. அது, டெலோவின் முக்கியஸ்தர்களைக் குறிப்பிட்டளவு உற்சாகப்படுத்தி இருக்கலாம்.

தமிழ்த் தேசிய அரசியல் என்றால், கூட்டமைப்பையும் அதன் தலைவர் சம்பந்தனையும் தமிழரசுக் கட்சியையும் எம்.ஏ. சுமந்திரனையும் சுற்றிச் சுழன்று கொண்டிருப்பதாகவே காணப்படுகின்றது. எனவே, தங்களுடைய இடம், எதிர்காலத்தில் அழித்துவிடும் என்கிற அச்ச உணர்வு, டெலோவைத் தனித்த அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வைத்திருக்கின்றது.

ஆனால், டெலோவின் அண்மைய முனைப்புகள் அனைத்துமே, சிறுபிள்ளைத்தனமானவையாகவே பதிவாகியிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளை முன்வைத்து, தமிழ்த் தேசிய கட்சிகளை ஒருங்கிணைத்து, ஆணையாளர் அலுவலகத்துக்கு கடிதமொன்றை அனுப்பியமை; அந்தக் கடிதத்தின் உள்ளடக்கம் தொடங்கி, கடிதம் அனுப்பப்பட்ட முறை வரை விமர்சனத்துக்கு உள்ளானது.

தமிழரசுக் கட்சியின் தலைமை, அப்போதும் அந்தக் கடிதத்தில் கையெழுத்திடவில்லை. அந்தப் பிரச்சினைகள் நிறைவடைந்ததும், தற்போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரும் சந்திப்புகளை நடத்தி வருகின்றது.

13ஆவது திருத்தம், தமிழ்த் தரப்பால் நிராகரிக்கப்பட்ட ஒன்று. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு, 13ஆவது திருத்தம் தீர்வாக அமையாது என்பதை ராஜபக்ஷர்கள் கூட ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்காலில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த போது, தமிழ் மக்களுக்கான தீர்வாக '13 பிளஸ்' பற்றி, அப்போதையை ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ உறுதி வழங்கியிருக்கின்றார்.

உரிமை அரசியலை முன்னெடுக்கும் எந்தத் தரப்பும், தீர்க்கமான பார்வையோடு இருக்க வேண்டும். சந்தர்ப்பங்களைக் கையாண்டு, இலக்கினை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும். ஆனால், டெலோவும் அதன் தலைமையும், சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் புரிந்து கொள்ளாமல், தங்களின் தனிப்பட்ட கட்சி அரசியலுக்காக, காலாவதியான விடயங்களைத் தூக்கிச் சுமக்கின்றன.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்துக் கொண்ட தென் இலங்கையே, '13 பிளஸ்' பற்றிப் பேசுவதற்குத் தயாராக இருக்கும் போது, 13ஆவது திருத்தம் பற்றி, டெலோ பேச ஆரம்பித்திருப்பது தென் இலங்கையை மிகவும் சந்தோஷப்படுத்தும்!

எப்போதுமே, இலக்கும் தீர்க்கதரிசனமும் போராட்ட குணமும் அற்ற ஓர் எதிரியையே அனைவரும் விரும்புவர். இன்றைக்கு அப்படியான ஒரு தீர்க்கதரிசனம் இல்லாத தரப்பாக, தமிழ் மக்களை, தென் இலங்கைக்கு முன்னால் நிறுத்துவதற்கு டெலோ முனைகின்றது.

இப்படியான கட்டங்கள்தான், டெலோ உண்மையில் யார் நலனுக்காக இயங்குகின்றது, யாரால் இயக்கப்படுகின்றது போன்ற கேள்விகளை எழுப்ப வைக்கின்றது.

தமிழ்த் தேசிய அரசியலில், 13ஆவது திருத்தத்தைத் தீர்வாக முன்வைத்துக் கொண்டு, எந்தக் கட்சியாலும் வெளிப்படையாக இயங்க முடியாது. ஆனால், டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற அமைப்புகள் இந்தியாவின் அனைத்து அசைவுகளுக்கும் ஏற்ப, கடந்த காலங்களில் ஆடி வந்திருக்கிறார்கள். அது, 1980களில் ஆரம்பித்துவிட்ட ஒன்று.

13ஆவது திருத்தம் என்பது, எந்தத் தருணத்திலும் இலங்கை அரசியலமைப்பில் இருந்து நீக்கப்பட்டுவிடக்கூடாது என்று இந்தியா நினைக்கின்றது. ஏனெனில், அது இலங்கை - இந்திய ஒப்பந்தம் வலுவிழக்காமல் இருப்பதற்கான சான்று.

அப்படியான நிலையில், தமிழ்த் தேசிய அரசியலில் 13ஆவது திருத்தத்தை நிராகரிப்பதை இந்தியாவால் இரசிக்க முடிவதில்லை. அதனால்தான், தன்னுடைய கைக்குள் கட்டுப்பட்டிருக்கும் தரப்புகளை முன்னிறுத்திக் கொண்டு, 13ஆவது திருத்தத்தைக் காப்பாற்ற நினைக்கின்றது. தன்னுடைய பிராந்திய நலன், பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் சார்ந்து, இந்தியா இயங்குவதைக் குறை சொல்ல முடியாது.

ஆனால், சொந்த மக்களை அடகு வைத்து, இந்தியாவின் நலன்களை நிறைவேற்ற வேண்டும் என்கிற நிலைப்பாட்டில் டெலோவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போதுதான், அதை முழுமையாக எதிர்க்க வேண்டிய வருகின்றது.

13ஆவது திருத்தம் தொடர்பிலான டெலோவின் இந்தச் சந்திப்புகளின் இறுதியில் தயாரிக்கப்படும் ஆவணங்களில் சம்பந்தனும் விக்னேஸ்வரனும் கைச்சாத்திடுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. இந்தியாவை திருப்திப்படுத்துவதற்காக விக்னேஸ்வரன் கையெழுத்திட்டாலும், சம்பந்தன் கையெழுத்திடும் வாய்ப்பு இல்லை. ஏனெனில், தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடுகளுக்கு அப்பால் நின்று, சம்பந்தன் செயற்படமாட்டார்.

அவ்வாறான நிலையில், டெலோவின் ஆவணம் இறுதி செய்யப்பட்டாலும், அது பெரிய கவனங்களைத் தமிழ் மக்களிடம் பெறாது. அந்தளவில், ஓரளவுக்கு நிம்மதி கொள்ளலாம்.

## கடிதங்கள்

### முத்தையன்கட்டு, இடதுகரை
### தபாலகக் கட்டடத்தை புனரமைக்கவும்

முல்லைத்தீவு, முத்தையன்கட்டு, இடதுகரை தபாலகத்தைப் புனரமைத்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு, முத்தையன்கட்டு, இடதுகரை கிராம பொது அமைப்புகள், அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

2010ஆம் ஆண்டில், ரூபாய் 21 இலட்சம் செலவில் குறித்த தபாலகம் அமைக்கப்பட்டது. கட்டடத்தை அமைத்த ஒப்பந்தக்காரர், தரமற்ற உள்ளீடுகளைப் பயன்படுத்தியதன் காரணமாக, தற்போது கட்டடம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால், முத்தையன்கட்டு, இடதுகரை தபாலகம், கமக்கார அமைப்பின் கட்டடம் ஒன்றில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

எனவே, மக்களின் நன்மைகருதி தபாலகத்துக்குரிய கட்டடத்தைப் புனரமைப்புச் செய்து, தபாலகத்தை அதனுடைய சொந்தக் கட்டடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை ஏற்படுத்துமாறு, முத்தையன்கட்டு மக்களும் பொது அமைப்பைச் சேர்ந்தவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்



சென்னை:

### அ.தி.மு.க முன்னாள் அமைச்சருக்குச் சொந்தமான இடங்களில்

# இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் சினிமா பாணியில் சோதனை

## நெடுஞ்சாலை ஒப்பந்த ஆவணங்கள் பல சிக்கின

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.தி.மு.க) முன்னாள் அமைச்சர்கள் வீடுகளில் சொத்துக் குவிப்பு புகார் தொடர்பாக, இலஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் தொடர்ந்து சோதனைகளில் ஈடுபட்டுவரும் நிலையில், நேற்று (15) முன்னாள் அமைச்சர் தங்கமணிக்குச் சொந்தமான இடங்கள் என நாமக்கல், ஈரோடு, சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் சுமார் 69 இடங்களில் சோதனைகள் நடைபெற்றன.



தங்கமணி, அவருடைய மகன் தரணிதரன், அவருடைய மனைவி சாந்தி ஆகியோர் மீது 4.85 கோடி (இந்திய) ரூபாய் சொத்து சேர்த்ததாகவும் ஊழல் தடுப்புச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் தங்கமணி, தனது வீட்டில் சோதனை நடத்த இலஞ்ச ஒழிப்பு பொலிஸாருக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தார். பூஜை அறை, வரவேற்பறை, சமையல் அறை, வி.ஐ.பிகளுடன் ஆலோசனை நடத்தும் அறை, வீட்டின் மேற்றளம், படுக்கை அறை போன்றவற்றில் பணம், நகை, சொத்து ஆவணங்கள் இருக்கிறதா எனச் சோதனை நடத்தப்பட்டது.

மேலும், குடிநீர் தொட்டி, மொட்டைமாடி, புத்தக அலுமாரி, மெத்தை, பாத்திரங்கள், சமையல் பொருட்கள் ஆகியவற்றை திறந்து பார்த்தனர். இப்படி வீடு முழுவதும் சல்லடை போட்டு, இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் ஆய்வு மேற்கொண்டனர்.

அத்துடன் சேலத்திலுள்ள தங்கமணியின் மகன் தரணிதரன் வீட்டின் ஒவ்வோர் அறையையும் சோதனை செய்தனர். சேலம் சந்தியில் உள்ள அஸ்வா பார்க் நட்சத்திர ஹொட்டலில் நுழைந்த இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் ஒவ்வோர் அறையாகச் சோதனை செய்தனர். இந்த ஹொட்டல் உரிமையாளரின் வீட்டிலும் இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் சோதனை நடத்தி, நெடுஞ்சாலை ஒப்பந்தங்களைக் கைப்பற்றியதாகத் தெரியவருகின்றது.

நாமக்கல்லில் தங்கமணியின் நண்பரின் வீடு உட்பட நான்கு இடங்களில் ஒரே நேரத்தில் இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் சோதனை மேற்கொண்டனர். அ.தி.மு.க ஆட்சியில் பல்வேறு கட்டடப் பணிகள் மேற்கொள்ளப் பட்டமை தொடர்பான விவரங்களும் சேகரிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சோதனை நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், 'அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே இந்தச் சோதனை நடைபெறுகிறது. தங்கமணிக்கு தொடர்புடைய இடங்களில் சோதனை நடத்தப்படுவது கண்டிக்கத்தக்கது. அ.தி. மு.கவுடன் நேரடியாக மோத முடியாமல் இலஞ்ச ஒழிப்புத்துறை மூலம் சோதனை நடத்துகிறது தி.மு.க அரசாங்கம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

வேலூர்:

## சுவரில் கன்னம்வைத்து கிலோ கணக்கில் நகை கொள்ளை

பிரபல நகைக்கடையான ஜோஸ் ஆலுக்காஸின் வேலூர் மாவட்டத்தில் தோட்டப்பாளையத்தில் உள்ள நகைக்கடையில், சுவரில் துளையிட்டு நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நகைக் கடையின் பின்புற சுவரில் துளையிட்டு உள்ளே நுழைந்த கொள்ளையர்கள், கீழ் தளத்திலிருந்த நகைகளை அள்ளிச் சென்றதாகக் கூறப்படுகிறது. முதற்கட்ட விசாரணையில், மூன்று தளங்கள் கொண்ட அந்தக் கடையில் 35 கிலோ தங்கம், வைரம், வெள்ளி நகைகள் திருடப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன் மதிப்பு கோடிக்கணக்கான ரூபாய் என தெரியவந்துள்ளது. மீதமுள்ள நகைகளைக் கணக்கீடு செய்துதான் துல்லியமாக எவ்வளவு கொள்ளை நடந்தது என்பது தொடர்பான தகவல் தெரியவரும். சி.சி.டி.வி காட்சிகளைக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். 2019ஆம் ஆண்டு திருச்சியில் உள்ள லலிதா ஜுவல்லரியில் இதேபோல் துளையிட்டு கொள்ளை நிகழ்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





---

நாக்பூர்:

## காதலனை மணக்க பொய் பாலியல் புகார்

வானில் கடத்தி, இருவர் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாக இளம்பெண் அளித்த புகாரின் அடிப்படையில், பொலிஸாரின் விசாரணையின் இறுதியில், காதலனை மணம்முடிப்பதற்காகவே அவர் பொய் புகார் அளித்தது தெரியவந்தது.

மஹாராஷ்டிரா மாநிலம், நாக்பூரைச் சேர்ந்த 19 வயது இளம்பெண், நேற்று முன்தினம் (14) காலை, சங்கீத வகுப்புக்குச் சென்றபோது, வானில் வந்த இருவர், வழி கேட்பதுபோல் நடித்து தன்னைக் கடத்தி, கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாகப் பொலிஸில் புகார் அளித்தார். இதையடுத்து, சி.சி.ரி.விக்களை ஆராய்ந்த பொலிஸார், இளம்பெண் காலையில் வெரைட்டி சதுக்கம் பகுதியில் பஸ்ஸில் இருந்து இறங்குவது முதல், ஓட்டோவில் ஏறியது உட்பட பல்வேறு இடங்களுக்கு பயணித்து, இறுதியாக 11:04 மணிக்கு பொலிஸ் நிலையம் வந்தது வரை காட்சிப் பதிவுகளை பொலிஸார் அடையாளப்படுத்தினர். இதனால் அவர் பொய் புகார் கொடுத்தது உறுதியானது. விசாரணையில் தன் காதலரை திருமணம் செய்து கொள்வதற்காக, இதுபோல் செய்ததாக கூறினார்.

---

இராமநாதபுரம்:

## இராஜராஜ சோழனின் இலங்கை நாணயத்தை கண்டெடுத்த பாடசாலை மாணவி



இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி அரசு மேல்நிலைப்பள்ளி, , மாணவர்களுக்குப் பழைமையான காசுகள், பானை ஓடுகளை அடையாளம் காண பயிற்சி அளித்துவருகின்றது. இதனால் மாணவர்கள், விடுமுறை நாள்களில் தங்கள் பகுதிகளில் உள்ள பழங்காலப் பொருட்கள், காசுகளை ஆர்வத்தோடு தேடிக் கண்டுபிடித்து வருகின்றனர்.

இந்நிலையில், இப்பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்துவரும் கு. முனீஸ்வரி என்ற மாணவி, மூன்று ஈழக் காசுகளைக் கோரைக்குட்டம் என்ற ஊரில் கண்டெடுத்துள்ளார்.

இதுபற்றி, தொல்லியல் ஆய்வாளர் வே. ராஜகுரு கூறியதாவது: "போர் மூலம், இலங்கையை முதலாம் இராஜராஜ சோழன் வெற்றிகொண்டதன் பின்னணியில் ஈழக் காசுகள் வெளியிடப்பட்டுள்ளன. செம்பால் ஆன ஈழக்காசு, 'ஈழக்கருங்காசு' எனப்படுகிறது.

இலங்கையின் பயன்பாட்டுக்காக வார்க்கப்பட்ட இக்காசுகளின் ஒருபக்கம், 'ஸ்ரீராஜராஜ' என மூன்று வரிகளில் எழுதப்பட்டுள்ளது" என அவர் கூறினார்.

---

சென்னை:

### ஆண்களை களங்கப்படுத்தும்

## 'புஷ்பா' பாடலுக்கு எதிர்ப்பு

'புஷ்பா' படத்தில் இடம்பெற்றுள்ள 'ஓ சொல்றியா மாமா...' என்ற பாடல், ஆண்களைத் தவறாகச் சித்திரிப்பதாகப் புகார் எழுந்துள்ளது. இப்பாடலைத் தடை செய்யக் கோரி, ஆந்திர நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தமிழகத்திலும் ஆண்கள் பாதுகாப்பு சங்கம் அறிக்கை மூலம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில், "ஓ சொல்றியா...' பாடலில் வரும் வரிகள், ஆண்களை வக்கிர புத்தியுள்ளவர்களாக சித்திரித்துள்ளது" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

திருச்சி:

### இரண்டு மனைவிகளை விட்டுவிட்டு

## மூன்றாவது பெண்ணுடன் பொலிஸ்காரர் கள்ளத்தொடர்பு

திருச்சியை சேர்ந்தவர் நவீன் (வயது 33) பொலிஸாகக் கடமையாற்றுகின்றார். 2013ஆம் ஆண்டு இவருக்கு முறைப்படி திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். 2016 ஆம் ஆண்டு, மற்றொரு பெண்ணைக் காதலித்து, இரண்டாவது திருமணம் செய்தார். இவருக்கும் 02 குழந்தைகள் உண்டு. சிறுகனூருக்கு நவீன் பணியிடமாற்றம் செய்யப்பட்டார். அப்போது, அங்கும் மூன்றாவதாக ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருந்துள்ளார். சந்தேகம் அடைந்த 2வது மனைவி விசாரித்த போது, 3வது பெண்ணுடன் தொடர்பில் இருப்பது தெரியவந்தது.

அவர் அளித்த புகாரின் அடிப்படையில் விசாரணை நடத்தியதில், நவீன் இரண்டு திருமணம் செய்ததும் 3வதாக ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பில் இருப்பதும் தெரியவந்தது. இதையடுத்து அவர் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

---







## விழிப்புணர்வு

கிளிநொச்சி லிட்டில் எய்ட் திறண் விருத்தி மையத்தால், வீதி பாதுகாப்பு விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக, நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற விழிப்புணர்வு செயற்றிட்டத்தின்போது, கவனயீர்ப்பை முன்னெடுத்தனர். அத்துடன், துண்டுபிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனத்தை செலுத்துதல், பாதசாரி கடவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், வேக கட்டுப்பாட்டை பேணுதல் உள்ளிட்ட விடயங்கள் இதன்போது வலியுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது ( படங்களும் தகவலும் யது பாஸ்கரன்)

---





## தெய்வீக கிராமம்...

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் தெய்வீக கிராமம் எனும் நிகழ்வுகள் விமரிசையாக இடம்பெற்றன.

இந்து மத விவகாரங்களுக்கான, பிரதமரின் இணைப்பாளர் கலாநிதி பாபு சர்மா ராமச்சந்திர குருக்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

கலாநிதி வெங்கட சுப்பிரமணிய குருக்கள், இந்து சமய கலாசார திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பவானி முகுந்தன், புத்தளம் மாவட்ட இந்து சமய கலாசார உத்தியோகத்தர் திருமதி விமலரஞ்சனி, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வெங்கட சுந்தாராம குருக்கள் மற்றும் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், அறநெறி மாணவ மாணவிகள் பெற்றோர்கள் பங்குபற்றுதலுடன் நிகழ்வுகள் சிறப்பாக நடந்தேறின.

(படங்களும் தகவலும் எம். யூ.எம். சனூன்)

---






## செயலமர்வு...

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை தடுப்பு தொடர்பில் இளைஞர்களுக்கான செயலமர்வொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (15) நடைபெற்றது.

கிராமிய பொருளாதார சமூக அபிவிருத்தி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இச்செயலமர்வில், வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகம், சைபர் கிரைம் உள்ளிட்டவை தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டன.

பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், வளவாளராக கலந்து சிறப்பித்தார். இதில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதில் சுமார் 20 க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

(படங்களும் தகவலும் ஹஸ்பர் ஏ ஹலீம்)

---





## பூஸ்டர்...

அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் வசிக்கும் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி நேற்று (15) செலுத்தப்பட்டது.

நோட்டன் பிரிட்ஜ் விதுலிபுர விஹாரையில் இந்த தடுப்பூசி செலுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டது.


இதன்படி களவெல்தெனிய, விதுலிபுர வடக்கு, விதுலிபுர தெற்கு, கிரிவனெலிய, ஹோமாகம ஆகிய பிரதேசங்களில் உள்ள 5 கிராம சேவக பிரிவுகளில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வாறு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதில், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட சுமார் 1,100 பேர் 3 ஆவதாக, பூஸ்டர் தடுப்பூசியாக, பைசர் தடுப்பூசியை செலுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படங்களும் தகவலும் எஸ்.கணேசன்)

---







## நற்சான்றிதழ் கையளிப்பு

உக்ரைனுக்கு அங்கிகாரம் பெற்ற இலங்கைத் தூதுவர் எம். ரிஸ்வி ஹசன், தனது நற்சான்றிதழ் கடிதத்தை 2021 டிசெம்பர் 09 ஆம் திகதி கீவ், மரின்ஸ்கிஜ் அரண்மனையில் நடைபெற்ற விழாவின் போது உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கியிடம் கையளித்தார்.

ஹெய்தி

ஹெய்தியில் கோர விபத்து

# 60 பேர் உயிரிழப்பு



ஹெய்தியில் பெட்ரோல் கொள்கலன்களை ஏற்றிச் சென்ற கனரக வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் 60 பேர் தீயில் கருகி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெய்தியில் பெட்ரோல், சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிபொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்நிலையில் நேற்றைய தினம் (14) கேப்-ஹைட்டியனில் பெட்ரோல் கொள்கலன்களை ஏற்றிச் சென்ற கனரக வாகனமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது குறித்த கனரக வாகனத்தில் இருந்து வெளியேறிய பெட்ரோலை கண்ட அப்பகுதி மக்கள் பாத்திரங்களில் அதை அள்ளிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது எதிர்பாராதவிதமாக கனரக வாகனம் தீப்பிடித்து எரிந்ததால் அங்கிருந்த 60 பேர் தீயில் கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 100 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், "இவ் விபத்து தேசிய பேரழிவு. இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாடு தழுவிய ரீதியில் மூன்று நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படும்" என்று அந்நாட்டுப் பிரதமர் ஏரியல் ஹென்றி தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா



## கோமாவில் பிரசவம்

கொரோனாத் தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு கோமாவுக்குச் சென்ற பெண்ணொருவருக்கு குழந்தை பிறந்துள்ள சம்பவம் பிரித்தானியாவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த லாரா என்ற 33 வயதான பெண்ணுக்கே இப்பிரவசம் இடம்பெற்றுள்ளது.

லாரா தன்னுடைய 31 வார கர்ப்ப காலத்தில், திடீரென கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டதால் சுய தனிமைப்படுத்துதலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்

இதன்போது அவருக்கு திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டு,கோமா நிலைக்குச் சென்றார். அவரைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் குழந்தையை அறுவை சிகிச்சை மூலம் வெளியே எடுப்பதற்கு முடிவு செய்தனர்.

இதனையடுத்து லாராவிற்கு மயக்க மருந்து கொடுத்த மருத்துவர்கள் குழந்தையை வெளியே எடுத்துள்ளனர்.

இருப்பினும் லாரா கடந்த ஏழு வாரங்களாக மயக்க நிலையை விட்டு திரும்பாமலேயே இருந்துள்ளார். இந்நிலையில் 7 வாரங்கள் கழித்து கோமாவில் இருந்து கண்விழித்த லாரா தனது குழந்தையைப் பார்த்து இன்ப அதிர்ச்சியடைந்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து வெளியானப் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## 74 வயதில் 98 கின்னஸ் சாதனைகள்

கின்னஸ் சாதனைகளைப் படைப்பதே நோக்கமாகக் கொண்ட 74 வயதான ஜோன் எவான்ஸ் என்பவர், இதுவரை 98 உலக சாதனைகளைப் படைத்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த இவர், அதிக நிறைகொண்ட பொருட்களை தூக்குவதிலேயே உலக சாதனை படைத்து வருகின்றார்.

குறிப்பாக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அவரது 75ஆவது பிறந்தநாள் வரவுள்ள நிலையில், தனது பிறந்த நாளைக்குள் நூறு கின்னஸ் சாதனைகளைப் படைத்து விடவேண்டும் என்ற உறுதியுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"வயதும் நோயும் ஒருபோதும் சாதனைக்கு தடையில்லை" என்று கூறும் இவர், மார்ச் மாதம் 75ஆவது பிறந்தநாள் வரவுள்ள நிலையில், நூறு கின்னஸ் சாதனைகளைப் படைத்து விடவேண்டும் என்ற உறுதியுடன் இருக்கிறார்**

அவருக்கு நீரிழிவு, ஆஸ்துமா, ஒரு கண் பார்வையிழப்பு, இதயத்திற்கு செல்லும் இரத்தக் குறைபாட்டால் உண்டாகும் *Angina* போன்ற பல்வேறு நோய்கள் உள்ளன.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் "வயதும் நோயும் ஒருபோதும் சாதனைக்கு தடையில்லை" என்றார்.





அமெரிக்கா

தடுப்பூசி செலுத்தாதவர்களை

## பணி நீக்க நடவடிக்கை

கொரோனா தடுப்பூசி விதிமுறைகளைப் பின்பற்றாத ஊழியர்களைப் பணிநீக்கம் செய்ய கூகுள் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக அந்நிறுவனம் தனது ஊழியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாகவும் அதன்படி தடுப்பூசி செலுத்தாத ஊழியர்கள், வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதிக்கு முதல், 30 நாள்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பில் அனுப்பப்படுவார்கள் என்றும், அதன்பிறகு சம்பளம் இல்லாத விடுப்பில் 6 மாதங்களுக்கு வைக்கப்பட்டு, பின்னர் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




மேலும், மருத்துவ மற்றும் மதரீதியான காரணங்களுக்காகத் தடுப்பூசி செலுத்தாதவர்கள் முறையாக விண்ணப்பித்து விலக்கு பெறலாம் என்றும் கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பான்

## 'கரப்பான் பூச்சி' பியருக்கு மௌசு

ஜப்பானில் கரப்பான் பூச்சிகைளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பியர் வகையானது அந்நாட்டு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

*Insect Sour* அல்லது *Konchu Sour* என்று அழைக்கப்படும் இப்பியரானது கபுடோகாமா எனப்படும் பாரம்பரிய முறையில் வடிகட்டப்பட்டு தயாரிக்கப்படுவதால் அதனை ஜப்பானியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பருகி வருவதாகக் கூறப்படுகின்றது. அதாவது நன்னீரில் இருக்கும் கரப்பான் பூச்சிகளைப் பிடித்து, அவற்றை வெந்நீரில் வேகவைத்து 3 முதல் 4 தினங்கள் வரை ஊறவைத்த பிறகு, அதில் இருந்து எடுக்கக்கூடிய சாறு பீயராக மாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து இப்பிரத்யேக பியரை ஜப்பானியர்கள் அருந்தி வந்தாலும் தற்போது அதன் விற்பனை மேலும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று இரண்டாவது ஆஷஸ் டெஸ்ட் ஆரம்பிக்கிறது:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா இங்கிலாந்து?

அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது, பகலிரவுப் போட்டியாக இலங்கை நேரப்படி இன்று காலை 9.30 மணிக்கு அடிலெய்ட்டில் ஆரம்பிக்கிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இந்த ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்து தோல்வியைத் தழுவிய நிலையில், மீண்டும் வருவதற்கு இங்கிலாந்து மிகப்பெரிய பணியை ஆற்ற வேண்டியுள்ளது.

இங்கிலாந்து அணியில் மார்க் வூட்டை ஜேம்ஸ் அன்டர்சன் பிரதியிடுவது மாத்திரமே மாற்றமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு, ஸ்டுவர்ட் ப்ரோட் குழாமில் இருந்தாலும் ஜேக் லீச் குழாமில் தொடருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



அந்தவகையில், மீண்டும் இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜோ றூட் ஓட்டங்களைப் பெறுவதிலேயே போட்டியின் முடிவு தங்கியுள்ளதுடன், ஒலி போப், ஜொஸ் பட்லர் உள்ளிட்டோரிடமிருந்தும் மேம்பட்ட பெறுபேறு எதிர்பார்க்கப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அணியில் காயமடைந்த ஜொஷ் ஹேசில்வூட்டை ஜை றிச்சர்ட்ஸன் பிரதியிடவுள்ளதுடன், உபாதைக்குள்ளாகியுள்ளபோதும் டேவிட் வோணர் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தவிர, மார்க்கஸ் ஹரிஸும் ஓட்டங்களைப் பெற வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்றார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

## இருபதுக்கு 20 தொடரைக் கைப்பற்றிய பாகிஸ்தான்




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை வென்றிருந்த பாகிஸ்தான், கராச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றதையடுத்தே இன்னும் ஒரு போட்டி இருக்கத்தக்கதாகவே தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் மொஹமட் றிஸ்வானின் 38 (30), இஃப்திஹார் அஹ்மட்டின் 32 (19), ஹைதர் அலியின் 31 (34) மற்றும் இறுதி நேரத்தில் ஷடாப் கான் ஆட்டமிழக்காமல் அதிரடியாகப் பெற்ற 28 (12) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அகீல் ஹொஸைன் 4-0-16-1, ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 4-0-30-1, ஒடியன் ஸ்மித் 3-0-24-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர். பதிலுக்கு, 173 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பிரண்டன் கிங் 67 (43), றொமாறியோ ஷெப்பர்ட் ஆட்டமிழக்காமல் 35 (19) ஓட்டங்களைப் பெற்றபோதும் 20 ஓவர்களில் 163 ஓட்டங்களையே பெற்று ஒன்பது ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், ஷகீன் ஷா அஃப்ரிடி 4-0-26-3, ஷடாப் கான் 4-0-22-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.



கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில்

## 5 தங்கங்களை வென்ற ஹனீபா சபீர் அலி கௌரவிப்பு

■ எம்.எல்.எஸ். டீன்

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் ஐந்து போட்டிகளில் பங்குபற்றி ஐந்து தங்கப் பதக்கங்களை வென்று அக்கரைப்பற்று மண்ணுக்கு பெருமை சேர்த்த விளையாட்டு வீரரான ஹனீபா சபீர் அலிக்கு கருங்கொடி மண்ணும், மக்களும் சார்பான பாராட்டும், கௌரவிப்பும் மாநகர சபைத் தலைவர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கத்தில் இடம்பெற்றது.

அண்மையில் இடம்பெற்ற கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கெடுத்த சபீர் அலி ஐந்து தங்கப்பதக்கங்களை வென்றதுடன், இவ்வாண்டின் மிகச் சிறந்த விளையாட்டு வீரர் மற்றும் கிழக்கின் சிறந்த மெய்வல்லுநர் என இரு மகுட விருதுகளையும் சூடிக்கொண்டார்.

மாகாண மெய்வல்லுநர் போட்டிகளில் கனதியான சாதனைகள் படைத்து அக்கரைப்பற்று மண்ணுக்கு மென்மேலும் கீர்த்தியும், புகழும் சேர்த்த சபீர் அலியை ஒட்டுமொத்த அக்கரைப்பற்று சமூகம் சார்பாக முதன் முதலில் பாராட்டி வாழ்த்தி, கௌரவிப்பதில் தாம் மிகுந்த பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைவதாக அகமட் ஸகி இந்நிகழ்வின் போது தெரிவித்தார்.

குறித்த இந்நிகழ்வில் கௌரவ அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்கள், அக்கரைப்பற்று பிரதேச சபை கௌரவ தவிசாளர் எம்.ஏ. றாசீக், கௌரவ பிரதேச சபை உறுப்பினர்கள், மாநகர ஆணையாளர் ஏ.ரீ. எம். றாபி மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

எல்.பி.எல்:

## ஜையன்ட்ஸை வென்ற கிளாடியேட்டர்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தம்புள்ள ஜையன்ட்ஸுடனான போட்டியில் கோல் கிளாடியேட்டர்ஸ் வென்றது.

மழை காரணமாக 14 ஓவர்களாக இடம்பெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஜையன்ட்ஸின் அணித்தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ், குசல் மெண்டிஸின் 35 (17), பானுக ராஜபக்ஷவின் 33 (20), தனுஷ்க குணதிலகவின் 22 (12), மொஹமட் ஹஃபீஸின் 11 (06), இசுரு உதானவின் 13 (08) ஓட்டங்களோடு, 14 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், இம்ரான் தாஹீர் 3-0-20-3, ஜொஷ் லிட்டில் 3-0-29-2, தரிந்து ரத்னாயக்க 3-0-17-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 135 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஜையன்ட்ஸ் சார்பாக, ஜனித் லியனகே 51 (37), பில் ஸோல்ட் 41 (29), நஜிபுல்லா ஸட்ரான் 16 (09), சாமிக கருணாரத்ன ஆட்டமிழக்காமல் 08 (03), சஷிந்த ஜயதிலகே ஆட்டமிழக்காமல் 05 (02) ஓட்டங்களைப் பெற்றபோதும் 14 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களையே பெற்று ஒன்பது ஓட்டங்களால் அவ்வணி தோல்வியடைந்தது. பந்துவீச்சில், சமித் பட்டேல் 3-0-24-2, இசுரு உதான 3-0-30-2, மொஹமட் ஆமிர் 3-1-24-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக பட்டேல் தெரிவானார்.



புத்தளம் கால்பந்தாட்ட சங்கத்தை

## இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன உபதலைவர் சந்தித்தார்

■ எம்.யூ.எம். சனூன்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர் றொட்றிகோ, புத்தளம் கால்ப்பந்தாட்ட சங்க உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு புத்தளம் நகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட புத்தளம் லீக்கில் அங்கத்துவம் வகிக்கும் கழகங்களின் வீரர்களுக்கு வழங்குவதற்கென 65 உலர் உணவுப் பொதிகளை இதன்போது லீக் நிர்வாகிகளிடம் றொட்றிகோ கையளித்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 16 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.